
நிர்மாணத்திட்டம்



6 அணா

பதிப்பாசிரியர் பி.ஸ்ரீ. :: தினமணி வெளியீடு 34

தினமணி வெளியீடு : 34

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ

நிர்மாணத் திட்டம்

(பொருளும் பயனும்)

மகாத்மா காந்தி எழுதியது



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்ட் ரோடு
சென்னை
1946

விலை அணா 6

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

" ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

" கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

" டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

" கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

" ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

" ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை

" எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

பொருளடக்கம்

எண்			பக்கம்
	முன்னுரை	...	5
	நூன்முகம்	...	9
1.	ஜாதிய ஒற்றுமை	...	11
2.	தீண்டாமை ஒழித்தல்	...	14
3.	மதுவிலக்கு	...	15
4.	கதர்	...	17
5.	இதர கிராமக் கைத்தொழில்கள்	...	23
6.	கிராமச் சுகாதாரம்	...	24
7.	புதிய கல்வி அல்லது அடிப்படைக் கல்வி	...	25
8.	வயது வந்தவர் கல்வி	...	26
9.	பெண்கள்	...	28
10.	ஆரோக்கியமும் அதன் கல்வியும்	...	30
11.	மாகாண பாஷைகள்	...	32
12.	தேசீய பாஷை	...	33
13.	பொருளாதார சமத்துவம்	...	35
14.	விவசாயிகள் (கிஸான்)	...	37
15.	தொழிலாளிகள்	...	40
16.	ஆதிவாசிகள்	...	41
17.	குஷ்டரோகிகள்	...	43
18.	மாணவர்கள்	...	44
	சட்டமறுப்பு—அதன் ஸ்தானம்	...	49
	முடிவுரை	...	51

பதிப்புரை

நிர்மாணத் திட்டத்தின் முழு வெற்றியே பரிபூர்ண சுயராஜ்யம் என்கிறார் மகாத்மா. அதனால்தான் இன்று அவர் எல்லோரையும் நிர்மாணத் திட்டத்தில் ஈடுபடும்படி அறைகூவி அழைக்கிறார்.

1931-ஆம் வருஷம் இந்த நூலை காந்திஜி எழுதினார். அப்போதே இது தமிழில் உருவாயிற்று. 1945-ல் காந்திஜி இந்நூலை முற்றும் திருத்தி எழுதினார். இந்தத் திருத்தப் பதிப்பை இப்போது தமிழில் உருவாக்கித் தருகிறோம்.

காந்திஜியின் நூலைப்பற்றி வேறென்ன சொல்வது?

பி. ஸ்ரீ.
பதிப்பாசிரியர்.

முன்னுரை

1941-ம் வருஷத்தில் நான் எழுதிய 'நிர்மாணத் திட்ட'த்தின் முற்றும் திருத்திய பதிப்பு இது. இதில் சேர்க்கப்பட்டுள்ள அம்சங்கள் முறையாக வகுக்கப்படவில்லை; முக்கியத்துவத் தராதரத்தோடு அமைக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தில் சுதந்திர முக்கியத்துவம் உள்ள ஏதேனும் ஓர் அம்சம் விட்டுப்போயிருப்பதாக வாசகர்கள் உணர்ந்தால், அதை வேண்டுமென்றே நான் விட்டுவிட்டதாய்க் கருதக்கூடாது. அவர்கள் சிறிதும் தயக்கமின்றி அதைக் குறித்து எனக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் இந்தக் குறிப்பு பரிபூர்ணமானது என்று நான் சொல்லிக் கொள்ளவில்லை; இது வெறும் உதாரணந்தான். மேலும் புதியதும் முக்கியமானதுமான பல அம்சங்களின் சேர்க்கையையும் வாசகர்கள் காணலாம்.

வாசகர்கள் — அவர்கள் தொண்டர்களாயினும், ஊழியர்களாயினும், அப்படி இல்லாவிடினும் சரி — நிர்மாணத் திட்டந்தான் பூர்ண சுயராஜ்யத்தை அடைய சத்தியமும் சாத்விகமும் கொண்ட வழியென்பதை நன்கு உணரவேண்டும். அதனுடைய முழு வெற்றிதான் பரிபூர்ண சுயராஜ்யம். 'சமூகத்தைக் கீழான நிலையிலிருந்து மேலேற்றுவதற்காக வகுக்கப்பெற்றுள்ள நிர்மாணத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதில் நாற்பது கோடி மக்களும் முனைந்தால்?'—என்று கற்பனை பண்ணிப் பாருங்கள். அன்னிய ஆதிக்க நீக்கத்தையும் உள்ளிட்ட பூர்ண சுதந்திரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் இத்திட்டம் குறிக்க வேண்டும் என்று யாரேனும் வாதாட முடியுமா? விமர்சகர்கள் இந்த யோசனையைக் கண்டு ஏளனம் செய்தால், நாற்பது கோடி மக்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஒருபோதும் ஒத்துழைக்க மாட்டார்கள் என்பதுதான் அவர்கள் கருதும் அர்த்தம். அந்த ஏளனத்திலும்

ஓரளவு உண்மையிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எனினும் இது பயனுள்ள முயற்சிதான் என்பது என் பதில். உண்மையான உழைப்பாளிகளை மட்டும் சிறந்த முறையில் ஊக்குவித்தால், இந்தத் திட்டமும் மற்றவை களைப் போல வெற்றிகரமாகவும் அதற்கு மேலாகவும் நிறைவேற்றக்கூடும். எவ்வழியிலும் அது அஹிம்ஸா தர்மத்தின் அடிப்படையில் வகுக்கப்பட வேண்டியிருந் தால் அதற்கு வேறு மாற்று கிடையாது.

சட்டமறுப்பு—அது தனிப்பட்டதாயினும், பொது ஜனமாயினும் சரி—நிர்மாண முயற்சிகளுக்கு ஒரு தூண்டுகோல்; ஆயுதப் பிரயோகங் கொண்ட புரட்சிக்கு முழு சடும் ஆகும். ஆயுதந் தாங்கிய புரட்சிக்கு ஆயுதப் பயிற்சி தேவைப்படுவதுபோல், சட்டமறுப் புக்கும் பயிற்சி தேவையானது. வழிகள்தான் வித்தியாச மானவை. இரண்டு வழிகளிலும் சந்தர்ப்பம் ஏற்படும் போதுதான் சாதனையும் ஏற்படுகிறது. ராணுவப் புரட் சிக்குப் பயிற்சியளிப்பதென்பது அணுக் குண்டில் வந்து முடியக்கூடிய ஆயுதப் பிரயோகக் கல்வியென்றுதான் அர்த்தம். ஆனால் சட்டமறுப்புக்கு நிர்மாணத் திட்ட மென்றே பொருள்.

ஆதலால், தொண்டர்கள் சாத்விக எதிர்ப்பைப் பற்றிக் கவலைகொள்ள மாட்டார்கள். நிர்மாணத் திட்ட முயற்சிகளை எதிர்த்துவருவனவற்றை எதிர்க்கத் தயாரா யிருப்பார்கள். ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலம் அதை எங்கு உபயோகிக்கலாம், எங்கு உபயோகிக்கக் கூடாது என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். அரசியல் ஒப்பந்தங்களின் அபிப்பிராய பேதங்கள் தனி மனிதர் களின் இதய பந்தத்தைத் தடுத்துவிட முடியாது. அப்படிப்பட்ட தன்னலமற்ற புனிதமான இதய நட்புத் தான் அரசியல் ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாக அமைய வேண்டும். அதுபோல, கதரின் பெருவாரி உற்பத்திப் பெருக்கைச் சர்க்கார் தடுத்துவிட முடியும்; ஆனால் தனி மனிதனின் கதர் உற்பத்தியையும், உபயோ

கத்தையும் சர்க்கார் தடுக்க முடியாது. கதர் உற்பத்தியும் உபயோகமும் பொதுஜனங்கள்மீது சுமத்தப்படவும் கூடாது. ஆனல், அதைச் சுதந்திர இயக்கத்தின் ஒரு அம்சமாக, மதியோடும் மனசோடும் ஒப்புக்கொள்ள வேண்டும். இதைக் கிராமம் கிராமமாகத்தான் சாதிக்க முடியும்.

உலகம் முழுதுமே தொண்டர்கள் துன்பத்தியில் துயரப்படுபவர்கள். துன்பமின்றி, சுதந்திரமே இல்லே. பலாத்கார போராட்டத்தில் சத்தியந்தான் முதலாவதும் அதிகமானதுமான துன்பத்தை அனுபவிக்கிறது. சாத்விகத்திலோ, சத்தியந்தான் என்றும் வெற்றி-முன்னணியில் நிற்கும். மேலும், சர்க்கார் நிர்வாகஸ்தர்களே எதிரிகளாகக் கருதவேண்டியதில்லே. அவர்க்ளே அப்படிக் கருதுவதே, சாத்விக உணர்ச்சிக்கு விரோதமானது. அபிப்பிராய பேதமிருக்கலாம்; அதுவும் அன்பர் என்ற முறையில்தான்.

ஆரம்பத் தசையிலுள்ள இந்த அபிப்பிராயங்களே வாசகன் நன்கு உணர்ந்துகொண்டால், நிர்மாணத் திட்டம் ஆழ்ந்த கவர்ச்சியுடையது என்பதை உணர்ந்து விடுவான். மேடைப் பிரசங்கமும், அரசியல் என்று சொல்லிக்கொள்ளப் படுவதும் எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கின்றனவோ அவ்வளவு கவர்ச்சிகரமாயிருப்பதோடு, நிச்சயமாக முக்கியத்துவமும் உபயோகமும் உடையதாக இருக்கும்.

நான்முகம்

நிர்மாணத் திட்டம் பூர்ண சுயராஜ்ய அமைப்பு அல்லது சத்திய - சாத்விக வழியில் அமையும் பூர்ண சுதந்திரம் என்று அழைக்கப் படுவதே மிகவும் பொருத்தமாயிருக்கும்.

சத்தியத்துக்குப் புறம்பான பலாத்காரத்தின் மூலம் சுதந்திரத்தை நிறுவ முயற்சிப்பதென்பது வேதனை நிறைந்தது என்பதை நாம் அறிவோம். இன்றைய யுத்தத்தில் தினசரி நடக்கும் பொருள் நாசம், உயிர்ச் சேதம், சத்திய பங்கம் முதலியவைகளை உற்று நோக்குங்கள்.

சத்தியம் - சாத்விகம் மூலம் ஏற்படும் பூர்ண சுதந்திரமென்பது ஜாதிமத நிற பேதமில்லாத, சமுதாயத்தின் எந்தக் கீழ்த்தரத் தொகுதிக்கும் உரிய தனிச் சுதந்திரத்தையே குறிக்கும். இந்தச் சுதந்திரம் என்றும் புறம்பானதல்ல. ஆதலால், அது உள்நாட்டு ஆதீனத்துக்கு உட்படினும் படாவிடினும் பொருத்தமானதுதான். *யூக்லிடின் 'கோடு' என்பதற்குரிய லக்ஷணம் அனுஷ்டானத்தில் எப்போதும் குறைவு படுவதுபோலவே, சாதனையும் என்றும் கொள்கைகளுக்குக் குறைவுபட்டதாகவே இருக்கும். ஆதலால் பூரண சுதந்திரமானது, நாம் எந்த அளவுக்குச் சத்தியத்தையும் சாத்விகத்தையும் சாதனையில் கொண்டு வருகிறோமோ, அந்த அளவுக்குப் பூர்ணமாகவே இருக்கும்.

வாசகர்கள் நிர்மாணத் திட்டத்தை மானஸிகமாக முற்றும் சிந்தனை செய்து பார்க்கட்டும். அப்படிப் பார்த்தால், அதை வெற்றிகரமாக நிறைவேற்றினால், நாம் விரும்பும் சுதந்திரமே அதன் முடிவாயமையும் என்ற

---

*யூக்லிடின் சூத்திரம்: நேர்கோடு என்பது நீளமுடையது; அகலமற்றது.

முடிவில் என்னோடு ஒத்துக்கொள்வார்கள். நாட்டிலுள்ள பெருங் கட்சிகளின் ஒப்பந்தத்தைத் தாம் கௌரவிப்பதாக ஏமெரி சொல்லுகிறார். ஆனால், நானோ நிர்மாணத்திட்டத்தின் ஓர் அம்சமான ஜாதிய ஒற்றுமைக்குப் பின்தான் இந்த ஒப்பந்தம் ஏற்பட முடியும் என்கிறேன். ஏமெரியின் நேர்மையைப் பற்றி இங்கு நாம் ஆராய வேண்டியதில்லை. ஏனெனில் அந்த ஒற்றுமை நேர்மையான முறையில் கிடைத்தால், அதாவது சாத்விக சாதனையில் கிட்டினால், அந்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் தானே ஏற்பட்டு விடும்.

மேலும், பலாத்காரத்தின் மூலம் சுதந்திரத்தை அடைந்து விடமுடியும் என்பதற்குரிய திட்டமான திட்டம் அல்லது அபிப்பிராயம் என்று ஒன்றுமில்லை. ஏனெனில், அது பலாத்காரத்தை ஆணித்தரமாக உபயோகிக்கும் சமூகத்தினரது ஏற்பாட்டைமட்டுமே எடுத்துக்காட்டும். அந்தச் சுதந்திரத்தில் பொருளாதார சமத்துவம் முதலியவைகளெல்லாம எண்ணவும் எட்டவும் முடியாதவை. சாத்விக முயற்சியில் நிர்மாணத் திட்டத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்வதற்கு, 'சுதந்திரம் அடைவதற்குப் பலாத்கார முறை பயனற்றது' என்ற என் கருத்தை வாசகர்கள் ஒப்புக்கொள்ளவேண்டு மென்பதில்லை. பலாத்காரத் திட்டத்தின் மூலம் சுதந்திரத்தை அடைந்துவிட முடியுமென்று வாசகர்கள் நம்பட்டும். எனினும், நிர்மாணத் திட்டத்தைப் பரிபூர்ணமாகச் சமூகம் நிறைவேற்றுவதின் மூலம் அந்தச் சுதந்திரத்தை நிச்சயமாக்கிக்கொள்ளலாம் என்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளட்டும்.

இனி மற்ற அம்சங்களைப் பார்ப்போம்.

நிர்மாணத் திட்டம்

(பொருளும் பயனும்)

---

1. ஜாதிய ஒற்றுமை

இந்த ஒற்றுமையின் அவசியத்தை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அரசியலால் சமைக்கப்பட்ட ஒற்றுமை ஒற்றுமையல்ல என்பதை ஒருவராவது உணரவில்லை. ஒற்றுமை என்றால் உடைந்துபோகாத இதய ஒற்றுமை என்றுதான் அர்த்தம். முதலில் இந்த ஒற்றுமைக்கு முக்கியமாய் வேண்டியது இதுதான்: அதாவது ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் அவர் எம் மதத்தினராயினும் சரி, தம்முள்ளேயே இந்து முஸ்லிம் கிறிஸ்தவர் பார்ஸி யூதர் போன்ற பல சமயத்தார்களின் சமய சமரசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவின் கோடிக்கணக்கானவர்கள் ஒவ்வொருவருடனும் தமக்குள்ள ஐக்கியத்தை உணரவேண்டும். இதை உணர்ந்துகொள்வதற்கு, ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் இதர மதத்தினரோடு நெருங்கிய தொடர்பும் ஐக்கியமும் கொள்ளவேண்டும். தம்முடைய மத நம்பிக்கைகளுக்கு எவ்வளவு மதிப்பு செலுத்துகிறாரோ, அதே மதிப்பைப் பிற மதத்தினருக்கும் செலுத்த வேண்டும்.

அந்த மாதிரியான சந்தோஷகரமான நிலைமை ஏற்பட்டுவிட்டால், ஸ்டேஷன்களில் இந்து - தண்ணீர் முஸ்லிம் - தண்ணீர், இந்து சா, முஸ்லிம் சா என்றெல்லாம் கூவும் அவமானகரமான கூக்குரல் மறைந்து போகும். அப்போதுதான், கல்விச்சாலைகளில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித் தனியறைகளும்

தண்ணீர் வசதிகளும், ஜாதியப் பள்ளிகளும், கலாசாலைகளும் ஆஸ்பத்திரிகளும் இல்லாமற்போகும். இந்த மாறுதலைக் காங்கிரஸ்காரர்கள் எந்தவித அரசியல் நோக்கமுமின்றி, தங்கள் மனச்சாட்சியுடன் ஒத்துழைப்பதின் மூலமே சாதிக்க முடியும். பிறகு அரசியல் ஒற்றுமையும் இயற்கையாகவே விளைந்துவிடும்.

சட்டசபைகளின் மூலமாகத்தான் நமக்கு அதிகாரம் கிடைக்கிறது என்ற எண்ணத்துக்கு நாம் ரொம்ப நாளாய் ஆளாகி யிருக்கிறோம். ஏதோ ஒருவித மனமயக்கத்தாலோ, தயக்கத்தாலோ ஏற்பட்ட பெருந் தவறுதான் இது என்று நான் கருதுகிறேன். இங்கிலாந்து சரித்திரத்தை அதிகம் படித்து விட்ட விளைவினால், அதிகாரம் எல்லாம் சட்டசபைகளிலிருந்துதான் மக்களுக்குக் கிடைக்கிறது என்ற எண்ணம் நம்மில் ஏற்பட்டுவிட்டது. ஆனால் அதிகாரம் மக்கள் கையிலிருக்கிறது என்பதுதான் உண்மை. அதுவும் தம்மால் தேர்ந்தெடுக்கப்பெறும் பிரதிநிதிகளின் கையில்தான் தாற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். மக்களின்றேல் சட்டசபையும் கிடையாது ; அதிகாரமும் கிடையாது. சென்ற இருபத்தோரு வருஷங்களாக இந்தச் சாதாரண உண்மையை மக்கள் உணரவேண்டுமென்பதற்காகவே நான் உழைத்து வந்திருக்கிறேன். சட்ட மறுப்பு என்பது பெருஞ் சக்திக் களஞ்சியம். எல்லா மக்களும் சட்டத்துக்குப் பணிந்து செல்ல மறுத்து அதனால் ஏற்படும் பலா பலனை அனுபவிக்கத் தயாராகிவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படியாயின் சட்டசபையும் நிர்வாகமும் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விடும். போலீஸும் ராணுவமும் ஒரு சிலரை மட்டும்—அவர்கள் எவ்வளவு பலம் பொருந்தியிருந்த போதிலும்—அடக்க முடியும். ஆனால் நாட்டு மக்களனைவரும் ஒன்றுகூடி எதற்கும் தயாரான வைராக்கிய புத்திகொண்டு எதிர்த்தால் போலீஸும் ராணுவமும் ஒன்றும் செய்து விடமுடியாது.

சட்டசபை அங்கத்தினர்கள் நாட்டின் பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயங்களுக்கு ஒத்து நடப்பதின் மூலந்தான் நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியும். அதாவது, நிறைந்த மன ஒருமைப்பாடுள்ள போதுதான் ஜனநாயகமும் வெற்றிபெற முடியும்.

ஆனால் இந்தியாவிலோ நாம் தனித் தொகுதிகள் என்ற பெயரில் பல வேறுபாடுகளை உண்டாக்கிக் கொண்டு, அதன்மூலம் ஜனநாயக ஆட்சி நடத்துவதாகப் பாசாங்கு செய்கிறோம். இந்த வேற்றுமைகள் இருந்து வரும்வரை, நான் சொல்லும் இதய பூர்வமான ஒற்றுமையை அடையமுடியாது. அதுபோன்ற சட்டசபை நடக்கிறது என்பதைத்தவிர, ஆளும் வர்க்கத்தாரிடமிருந்து கிடைக்கும் மிச்சம் மிஞ்சாடிகளுக்குச் சண்டையிடவும், அதைப் பங்கிடவும் நடக்கும் குஸ்தி கோதர்வாகத்தான் அமையும். இந்த ஆட்சி அடுத்தவன் வாயில் விழுவதைத் தட்டிப் பறிக்கும் வேலையாகத்தான் முடியும். இந்த மாதிரி அவமானகரமான நிலையில் பூரண சுதந்திரம் கிடைத்து விடுமென்று நான் நம்பவில்லை.

நான் வலுவான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தாலும், தேர்தல் தொகுதிக்குத் தகுதியற்ற அபேட்சகர்கள் நிற்கும்வரை, அத்தொகுதிகளில் பிற்போக்காளர்கள் நுழைவதைக் காங்கிரஸ் தடுத்தாக வேண்டும் என்றே நான் முடிவு கட்டவேண்டியிருக்கிறது.

1095

2. தீண்டாமை ஒழித்தல்.

இந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சாபத்தை, அபவாதத்தை நீக்க வேண்டியது அவசியம் என்று இப்போது சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய தில்லை. காங்கிரஸ்காரர்கள் இந்த விஷயத்தில் ஓரளவு சாதித்திருக்கிறார்கள். ஆனால் வருந்தத் தக்கது என்ன வென்றால், பல காங்கிரஸ்காரர்கள் இந்த அம்சத்தை வெறும் அரசியல் தேவையாக மட்டும் கருதி விட்டார் களே யன்றி, இந்து மதத்தின் ஜீவியத்தை நிர்ண யிக்கும் இன்றியமையாத கடமையாக உணரவில்லை. இந்த உண்மை தெரிந்து அவர்கள் உழைக்க ஆரம்பித் தால், சநாதனிகளை இன்று கவர்ந்திருக்கும் அளவைவிட அதிகமாகக் கவர முடியும். அவர்கள் சநாதனிகளை சாத்விக முறைக்கு ஒப்ப, நட்பு முறையில் நெருங்க வேண்டும்; யுத்த சன்னத்தராக அல்ல. ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில், எக்காலத்திலும் ஈடு செய்ய முடியாத தீமை இந்தியாவில் இருப்பதை நன்கு உணர்ந்து அவர்களைக் கரையேற்றி உதவ, அவர்களோடு நட்புரிமை பாராட்டவேண்டும். எனினும் இந்த வேலை எவ்வளவு சிரம சாத்தியமானது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் சுயராஜ்ய மாளிகைக்கு இந்த வேலை யையும் மேற்கொண்டே ஆகவேண்டும். இதில் வழுக் கல்களும், மேடு பள்ளங்களும் நிறைய இருக்கின்றன. இவைகளையெல்லாம் கடந்து சென்றாலன்றி, சிகரத்தி லேறிச் சுதந்திர சுகந்தத்தைச் சுவாசிக்க முடியாது.

---

3. மதுவிலக்கு.

ஜாதிய ஒற்றுமையையும் தீண்டாமை விலக்கையும் போலவே மதுவிலக்கும் 1920-ம் வருஷம் முதல் காங்கிரஸ் திட்டத்தில் இருந்து வந்த போதிலும், இந்த முக்கியமான சமூகச் சீர்திருத்தத்தில், தாம் உழைத்திருக்க வேண்டிய அளவுக்குக் காங்கிரஸ் காரர்கள் சிரமம் எடுத்து உழைக்கவில்லை. அஹிம்ஸா சாதனத்தின் மூலம் நாம் சுதந்திரத்தை அடைவதாயிருந் தால், குடிப் பழக்கத்தின் சாபத்துக்காளான லக்ஷக் கணக்கான ஆண் பெண் சமூகத்தைக் கரையேற்றும் வேலையை எதிர்காலச் சர்க்காருக்கென்று ஒதுக்கி வைத்துவிடக் கூடாது.

இந்தத் தீமையை நீக்கும் விஷயத்தில் வைத்திய ஆராய்ச்சியாளர்கள் சிறந்த சேவை செய்ய முடியும். கஞ் சாவுக்கும் கள்ளுக்கும் அடிமைப் பட்டவர்களைக் காப்பாற் றும் மார்க்கங்களை அவர்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

பெண்களும் மாணவர்களும் இந்தச் சீர்திருத்தத் தில் சேவை செய்ய வசதிகள் உண்டு. அன்பு கலந்த சேவையினால், இப்பழக்க முடையவர்களைக் கவர்ந்து விடலாம்; அதன்மூலம் அந்தக் கொடிய பழக்கத்தி லிருந்து விடுபடுவதற்குரிய வழியும் சுலபமாகிவிடும்.

காங்கிரஸ்காரர்கள் நல்ல சாவடிகள் அமைத்து, உழைத்துக் களைத்துவரும் உழைப்பாளிகளுக்குச் சிரம பரிகாரம் செய்யவும், ஆரோக்கியமானதும் விலை சரச மானதுமான சிற்றுண்டிகள் கிடைக்கவும், மனசுக்குப் பிடித்த விளையாட்டுக்களில் கலந்து கொள்ளவும் வசதி செய்து கொடுக்கலாம். இம்மாதிரியான வேலைகள் மனக் களிப்பும் முன்னேற்றமும் தரக்கூடியவை. அஹிம்ஸா முறையால் சுதந்திரத்தை அணுகுவது ஒரு நவீன முறை. அது பழையன கழிந்து புதியனவற்றிற்கு இடந்தரு கிறது. பலாத்கார முறையில் இம்மாதிரிச் சீர்திருத் தத்திற்கு இடமே கிடையாது. பலாத்காரத்தை நம்புகிற

வர்களின் பொறுமை யின்மையால், (அதைவிட, பேதைமை என்று சொல்வதே பொருத்த மாயிருக்கும்) எல்லாவற்றையும் பின்னல் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கி விடுகிறூர்கள். ஆனல், உண்மையான, நிலையான சுதந்திரம் மனத் தூய்மையினல்தான் உருவாக வேண்டும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறூர்கள். நிர்மாணத் திட்ட ஊழியர்கள் அதற்கென்று வழி வகுக்கா விடினும், சட்ட பூர்வமாக மதுவிலக்கைக் கொண்டு வருவதைச் சுலபமாக்கி விடுவார்கள்.

---

4. கதர்

'கதர்' அபிப்பிராய பேதங்கள் கொண்ட விஷயம்.

கதரை நான் ஆதரிப்பதால், நான் எதிர் காற்றில் பயணம் செய்வதாகவும், அதனால் சுயராஜ்யக் கப்பலைக் கவிழ்த்து விடுவது நிச்சய மென்றும், நாட்டை மீண்டும் பழங்கால முறைகளை நோக்கிப் பின்னிழுக்கிறேனென்றும் பலர் நினைக்கிறார்கள். ஆனால் கதர் விஷயத்தை இந்தச் சிறு குறிப்பில் விவாதிக்க நான் விரும்பவில்லை. அதைப்பற்றித் தேவையான அளவுக்கு வேறு இடங்களில் விவாதித்திருக்கிறேன். ஒவ்வொரு இந்தியனும் காங்கிரஸ்காரனும் கதரின் முன்னேற்றத்துக்காக என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றியே இங்கே குறிப்பிடுகிறேன். நாட்டில் பொருளாதார சுதந்திரமும் சமத்துவமும் எல்லோருக்கும் கிடைப்பதின் தொடக்கத்தையே இத் திட்டம் குறிக்கிறது. 'ரொட்டியின் குணம் ருசியிலேயே தெரிந்துவிடும்.' ஒவ்வொரு ஆணும் பெண்ணும் முயன்றால் நான சொல்லுவதின் உண்மையைத் தமக்குத் தாமே உணர்ந்து கொள்ள முடியும். எல்லாவிதச் சங்கடங்களுடனும், கதரை ஒப்புக்கொள்ள வேண்டும். அதாவது முற்றும் சுதேசிய மனப்பான்மை உண்டாக வேண்டும். வாழ்க்கைத் தேவைகளை யெல்லாம் இந்தியாவிலிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும் - அதுவும் கிராம மக்களின் உழைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் - என்றே பொருள்படும். அதாவது இன்றைய நிலைமையின் தலைகீழ்ப்பாடம் என்று அர்த்தம். அரைடஜன் இந்திய நகரங்களும், இங்கிலாந்தும், இந்தியாவிலுள்ள எழுபது லக்ஷம் கிராமங்களைச் சுரண்டி வாழ்வதற்குப் பதில், கிராமங்கள் தங்களுக்குரிய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதோடு, இந்திய நகரங்களுடனும், உலக நகரங்களுடனுங் கூட மனசோடு ஒத்துழைப்பார்கள் என்று சொல்ல வேண்டும். இது இருபான்மையருக்கும் நன்மையானது.

பலருடைய அபிப்பிராயங்களும், மனப்பான்மையும் புரட்சிகரமாக மாற வேண்டிய தேவையைக் கதர் உண்

டாக்குகிறது. சாத்விகப் பாதை பல வகையில் சுலபமாயினும், வேறு பலவகைகளில் சிரம சாத்தியமானது. அது ஒவ்வொரு இந்தியனின் வாழ்க்கையையும் ஆழமாகத் தொடுகிறது; தன்னுள்ளே மறைந்து கிடக்கும் மகா சக்தியை உணரச் செய்கிறது; இந்திய சமுதாய சாகரத்தின் ஒவ்வொரு துளியோடும் தனக்குள்ள சம்பந்தத்தை உணர்ந்து, பெருமை கொள்ளச் செய்கிறது. இத்தனை காலமாய் நாம் சரித்திர வாயிலாகத் தெரிந்துகொண்ட சாத்விகமல்ல இது. இதுதான் இன்றுவரை தெரிந்துகொள்ளப்பட்ட மனித சமூகத்தின் சிறந்த ஜீவசக்தி; இதைச் சார்ந்துதான் மனித சமுதாயத்தின் வாழ்வே அமைந்திருக்கின்றது. அதுதான் நான் காங்கிரஸில் உபயோகிக்க முயன்றதும், அதன்மூலம் உலக நலனுக்கு உபயோகிக்க விழைந்ததுமான மகா சக்தியாகும். கதர் என்றால் இந்தியப் பொருளாதாரச் சுதந்திரம், சமத்துவம், பாரத சமுதாய ஒற்றுமை இவைகளைக் குறிக்கும் சின்னமாக எனக்குப் படுகிறது. ஜவாஹர்லால் நேரு கதரை 'இந்திய சுதந்திரத்தின் ராஜ உடை' என்று அழகாகக் கூறியதும் பொருத்தமானதே.

மேலும், கதர் வளர்ப்பு-மனப்பான்மை யென்பது தினசரித் தேவைகளுக்கு வேண்டிய உற்பத்தியையும் அதன் விநியோகத்தையும் தேவையுள்ள இடங்களில் திட்டப்படி விருத்திசெய்வது என்றே அர்த்தம். ஆதலால், இதுவரையில் சொல்லப்பட்ட சூத்திரத்தின் சாரம் இதுதான்: ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய தேவைகளுக்குத் தானே உற்பத்தி செய்துகொள்வதோடு, நகரத்தேவைகளுக்கும் பயன்படும் வண்ணம், ஏராளவு அதிகம் உற்பத்தி பண்ண வேண்டுமென்பதேயாம்.

பெருந்தொழில்களைச் சங்க அமைப்பினாலும் தேசியத்தினாலுமே செய்ய வேண்டும். ஆனால் தேசம் பூராவும் கிராமத்தொழில்களே ஜாஸ்தியாயிருக்கும்போது, இது குறைவாகவே இருக்கும்.

கதரின் தத்துவத்தை விளக்கியாய்விட்டபடியால், அதன் முன்னேற்றத்துக்குக் காங்கிரஸ்காரர்கள் என்ன

செய்யவேண்டும், என்ன செய்ய முடியும் என்பதைப் பார்ப்போம். கதர் உற்பத்தி என்பது பருத்தி விளைத்தல், பருத்தி பொறுக்கல், பஞ்சரைத்தல், பஞ்சைக் கடைதல், பட்டை போடுதல், நூற்றல், பசையேற்றல், சாயம் போடுதல், ஊடும் பாவும் தயாரித்தல், நெய்தல், சலவை செய்தல் முதலியவைகளை யெல்லாம் தன்னுட் கொண்டது. இவற்றில் சாயம் காய்ச்சுவதைத் தவிர மற்றவை தொழிலுக்கு இன்றியமையாதவை. இவை ஒவ்வொன்றையும் கவனத்தோடு கிராமங்களில் கையாள முடியும்; அ. இ. சர்க்கா சங்கத்தார் மேற்பார்க்கும் கிராமங்களில் அப்படியே செய்யப்பட்டும் வருகின்றன. சமீபத்தில் வந்த புள்ளி விவரங்களைக் கீழே பாருங்கள்:

நூற்போர் நெய்பவரான குடிமக்களின் மொத்தத் தொகை, 275,146. அவர்களில் 19,645 ஹரிஜனங்கள். 57,378 முஸ்லிம்கள். கிராமங்களின் தொகை 13,451. 1940-ம் வருஷத்துக் கூலி மொத்தம் ரூ. 3,485,609. இவர்களில் பெரும்பாலோர் பெண்களே.

எனினும், காங்கிரஸ்காரர்கள் கைத்தறி இயக்கத்தை நேர்மையோடு ஏற்று உழைத்தாலேற்படக் கூடும் பலனில் நூற்றில் ஒருபங்குகூட இல்லை. நாட்டின் கேந்திரமான இந்தக் கிராமத் தொழிலையும் அதன் சம்பந்தமானவற்றையும் வேண்டுமென்றே அழிக்க முற்பட்டுப் போய்த்தான் கிராமமக்களின் அறிவும் ஆற்றலும் பறந்து போய், ஒளிகுன்றி, அவர்கள் நோய் பிடித்த கால்நடைகளின் கதிக்குத் தாமும் வந்துவிட்டார்கள்.

காங்கிரஸ்காரர்கள் மட்டும் கதர் விஷயத்தில் காங்கிரஸுக்கு நேர்மையாக நடந்துகொள்வார்களேயானால், அ. இ. ச. சங்கத்தார் அவ்வப்போது வெளியிடும் திட்டங்களை அவர்கள் நிறைவேற்றியே தீர்வார்கள். ஓரிரண்டு பொதுவான விதிகளை மட்டுமே இங்கு நான் கூற முடியும்.

1. சொந்த நிலமுடைய ஒவ்வொருவனும் தன் நிலத்தில் தன் தேவைக்காக ஓரளவு பருத்தி விளைவிக்கலாம். பருத்திப் பயிர் செய்வது சுலபமான வழி. பிஹார் மாகாணத்தில் குடியானவர்கள் தங்கள் நிலத்தின் 3/20 பாகத்தில் அவுரிச் செடி பயிர் செய்ய வேண்டுமென்று சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள். இதுவும் அயல் நாட்டுச் சாய வியாபாரியின் நலத்துக்காகவே. ஆகவே, நம் நிலத்தின் ஒரு பகுதியில் நமது நாட்டிற்காக நாம் ஏன் பருத்தி விளைவிக்கக்கூடாது? தேவைக்கு உற்பத்தி செய்து கொள்வது என்பது கதர் இயக்கத்தின் முதலிலிருந்தே கூறப்பட்டு வருகிறது என்பதை வாசகர்கள் உணர்ந்திருக்கவேண்டும். இன்று பருத்திச் செடியை வியாபாரார்த்தமாகப் பயிரிட்டு, இந்தியாவின் பல பாகங்களுக்கும் அனுப்புகிறார்கள். யுத்தத்துக்குமுன் முக்கியமாக இங்கிலாந்துக்கும், ஜப்பானுக்கும் இந்தியப் பருத்தி அனுப்பப்பட்டு வந்தது. எந்நாளும் அது பணமதிப்புள்ள பயிர்; ஆதலால்தான் மார்க்கெட் நிலவரங்களுக்கும் அது உட்படுகிறது. கதர்த் திட்டத்தில் பருத்தி இம்மாதிரியான திருகுதாளங்களுக்கும் ஏமாற்றுகளுக்கும் உட்படுவதில்லை. குடியானவன் தன்னுடைய தேவைக்காகப் பயிர் செய்து கொள்வதே தனது முதல் வேலையென்பதை உணரவேண்டும். அதை உணர்ந்துவிட்டால், மார்க்கெட் நிலவரங்கள் தன்னை அழிக்க முற்படுவதிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும்.

பயிர் செய்ய முடியாதவர்கள் உருளையிட்ட கைமணை இல்லாமல்கூட, பருத்தி வாங்கி அரைத்துக்கொள்ளலாம். தமக்குத் தேவையான பருத்தியை ஒரு பலகையும், இரும்புக் குழவியும் கொண்டே அரைத்துவிடலாம். இதுவும் சௌகரியப்படவில்லை யென்றால், அரைக்கப்பட்ட பஞ்சை விலைக்கு வாங்கி வெட்டிக்கொள்ள வேண்டும். வெட்டுப்போடுவதற்கு, ஒரு சிறு வில் போதும். தேவைக்கு உற்பத்தி செய்துகொள்வது என்பதைக் கிரியாம்சத்தில் எவ்வளவுக் கெவ்வளவு கொண்டு

வருகிறேமோ, அவ்வளவுக்கவ்வளவு கருவிகளும் மலிவாகவும் சௌகரியமாகவும் கிடைத்துவிடும். பட்டை போட்ட பின்னர் நூற்கத் தொடங்கவும், நான் தனுஷ் தக்ளியை மிகவும் சிபாரிசு செய்கிறேன். நானே அதை அடிக்கடி உபயோகித்திருக்கிறேன். ராட்டையைப் போலவே அதிலும் எனக்கு வேகம் வருகிறது. ராட்டையில் வருவதைவிட, தனுஷ் தக்ளியில் மெல்லியதும், பலமுள்ளதும் நெரடற்றதுமான நூலை நூற்க என்னுல் முடிகிறது. ஆனுல் இது எல்லாருக்கும் வசப்பட்டுவிடும் என்று கருதுவதற்கில்லை. தனுஷ் தக்ளியை உபயோகிக்கவேண்டும் என்று நான் சொல்வதின் காரணம் இது தான். அது சுலபமாகச் செய்யப்படுகிறது; மலிவானது; ராட்டையைப்போல் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய தொல்லையும் கிடையாது. ராட்டையிலுள்ள இரண்டு மாலைக் கயிறுகளும் கழன்று விழுந்தால் அவற்றைக் கையாளத் தெரியாவிடினும், அவைகளின் காரணம் அறியாவிடினும், ராட்டை வேலை செய்யவில்லையெனினும், ராட்டை தூங்கியிருந்து விடும். நாம் விரும்புவதுபோலவே, லக்ஷக்கணக்கானவர்கள் நூல் நூற்க ஆரம்பித்து விட்டால், தனுஷ் தக்ளியே தேவையைப் பூர்த்தி செய்யவும், சுலபமாகக் கையாளவும் சௌகரியப்படும் என்று எண்ணுகிறேன். சாதாரணத் தக்ளியை விட, இதைச் சுலபமாகச் செய்துவிடலாம். அதை ஒருவராகச் செய்வதுதான் மலிவானது; சுலபமானது; நல்லதுங்கூட. உண்மையில் ஒருவர் கருவிகளைச் செய்யவும் உபயோகிக்கவும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். நாட்டின் மொத்த சமுதாயமும் ஒரே அடியாக நூல் நூற்கும் தொழிலில் இறங்கிவிட்டால் ஏற்படும் ஒற்றுமையையும் உயர்வையும் எண்ணிப் பாருங்கள். ஏழைக்கும் பணக்காரருக்கும் இடையே பொது வேலையினுல் ஏற்படும் சமன் நிலையைக் கருதிப் பாருங்கள்.

உற்பத்தி செய்த நூலை மூன்று வழிகளில் உபயோகிக்கலாம்: ஏழைகளின் உதவிக்காக அ. இ. ச. சங்கத்தாருக்கு அதைத் தானம் வழங்கலாம். சொந்த உபயோ

கத்துக்கு வைத்துக் கொள்ளலாம். அதைக்கொண்டு எவ்வளவு கதர் வாங்க முடியுமோ அவ்வளவு கதரும் வாங்கிக்கொள்ளலாம். நூலானது எவ்வளவுக் கெவ்வளவு மெல்லிசாகவும், நல்லதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கு அதன் மதிப்பும் ஜாஸ்தி. காங்கிரஸ்காரர்கள் மட்டும் இவ்வேலையில் இதய பூர்வமாய்க் கலந்து கொண்டால், கருவிகள் உற்பத்தியிலும், புது வழிகளிலும் எவ்வளவோ முன்னேற்றங்கள் காண முடியும். நமது நாட்டிலோ உழைப்புக்கும் அறிவுக்கும் எப்போதும் தகராறு இருந்து வருகிறது. இதன் விளைவு வெறும் தேக்கந்தான். ஆனால் அவை இரண்டுக்குள்ளும் பிரிக்க முடியாத ஒரு கூட்டுறவு ஏற்பட்டு விட்டால், இங்கு கூறியுள்ளபடி, ஏற்படும் நன்மையின் வெற்றி அளவிட முடியாது.

நாடு முழுதும் இந்த நூல் நூற்கும் பரந்த வேள்வித் திட்டத்தில், சாதாரண ஆண் பெண்களிடமிருந்து ஒரு மணி நேரத்துக்கு மேற்பட்ட வேலையை நான் எதிர்பார்க்கவில்லை.

---

5. இதர கிராமத் தொழில்கள்.

இது கதர் அம்சத்திலிருந்து மாறு பட்டது. இதில் தாமாக மனமுவந்துழைப்பதற்குரிய அம்சம் அதிகமாயிருப்பதில்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சிலருடைய உழைப்புத்தான் தேவையானது. அவைகளும் கதரியக்கம் இன்றி வாழ முடியாது; கதரியக்கத்துக்குள்ள மதிப்பும் இத்தொழில்களில்லையெனில் குறைந்து போம். கைக்குத்தல், மாவரைத்தல், சோப்பு செய்தல், காகிதம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தோல் பதனிடுதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய கிராமத் தொழில்களில்லாமல், கிராமப் பொருளாதாரம் சரிப்பட முடியாது. காங்கிரஸ்காரர்கள் கிராமவாசிகளா யிருந்தாலும், கிராமங்களில் குடியேறுபவர்களாயிருந்தாலும், இதில் அக்கறை கொண்டு, இந்தத் தொழில்களுக்குப் புதிய வாழ்வும் வளமும் அளிக்க முடியும். கிடைக்கக் கூடிய கிராமப் பொருள்களை எங்கும் எப்போதும் உபயோகிக்க வேண்டும் என்று எல்லாரும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தேவையைச் சொல்லுங்கள்; நம்முடைய தேவைகளில் பலவற்றைக் கிராமங்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதில் சந்தேகமில்லை. நாம் மட்டும் கிராம-மனத் தன்மை படைத்து விட்டோமானால், ஆலைப் பொருள்களையும், மேல் நாட்டுச் சரக்குகளின் போலி வர்க்கத்தையும் விரும்ப மாட்டோம். ஆனால் அதற்குப் பதிலாக வறுமை, பட்டினி, சோம்பல் என்பவற்றை அறியாத இந்தியாவை எதிர் நோக்கும் புதுத் தேசிய உணர்ச்சியை நாம் செயலிலும் சிந்தையிலும் கொள்ள முயல்வோம்.

6. கிராமச் சுகாதாரம்

உழைப்பும் அறிவும் உலேந்திருப்பதால் ஏற்பட்ட விளேவு தான் கிராமங்களே நாம் அலட்சியம் செய்து விட்டுவிட்டதும். ஆதலால்தான் நிலத்தை ஆங்காங்கு அலங்கரிக்கும் சிறு குடில்களுக்குப் பதிலாகக் குப்பைமேடுகள்தான் கிராமங்களில் இருக்கின்றன. பல கிராமங்களுக்குச் செல்வது மனசுக்கு இன்பகரமா யிருப்பதில்லே. சமயங்களில் கண்களேயும் மூக்கையும் பொத்திக்கொள்ளக்கூட வேண்டியிருக்கும். சுற்றுப்புறத் தூசியும் துர்நாற்றமும் அவ்வளவுக்கு இருக்கும். காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் நாம் விரும்புவதுபோலக் கிராமத்தார்களாக இருந்தால், கிராமங்களே முற்றும் பரிசுத்த நிலயங்களாகச் சமைத்து விட முடியும். தம்முடைய தினசரி வாழ்க்கையில் தமக்கும் கிராமவாசிகளுக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டியது தம் கடமை என்பதை அவர்கள் கருதவில்லே. நமக்குள்ளேயே 'தேசிய சமூக சுகாதாரம் புனிதமானது' என்ற எண்ணம் ஏற்படவில்லே. நாம் எப்படியாவது, ஸ்நானம் செய்து கொள்வோம்; எனினும் கிணறு, குளம், ஆறு இவைகளேப் பல வகைகளில் அசுத்தப் படுத்துவதை மட்டும் பொருட்படுத்த மாட்டோம். இந்தக் குறையை நான் பெரும் பாபமாகக் கருதுகிறேன். புனித நதிக்கரைகளே மாசுபடுத்துவதின் மூலம் ஏற்படும் அசுத்தத்தினல் பரவும் நோய்களுக்கும் கிராமங்களின் இன்றைய கேவலமான ஸ்திதிக்கும் இந்த அலட்சியந் தான் பொறுப்பானது.

7. புதிய கல்வி அல்லது அடிப்படைக் கல்வி

இது ஒரு புது விஷயம். ஆனல், காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் இதில் அதிக சிரத்தை கொண்டிருக்கிருர்கள்; அதனல், ஹரிபுரா காங்கிரஸ் காலத்திலிருந்து ஒழுங்காகச் சேவை செய்துவரும் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தாரிடம் ஒரு மசோதா தயாரித்துக் கொடுத்திருக்கிருர்கள். காங்கிரஸ்காரர்கள் பலருக்கு இதில் நிறைய உழைக்க இடம் உண்டு. இந்தக் கல்வி முறை கிராமச் சிறுவர்களை லக்ஷியக் கிராமவாசிகளாக்குவதற்கென்று ஏற்பட்டது; அவர்களுக்கென்றே வகுக்கப்பெற்றது. மேலும் இந்த உணர்ச்சியே கிராமங்களிலிருந்துதான் எழுந்தது. சுயராஜ்யத்தை அஸ்திவார அடிவானத்திலிருந்தே எழுப்ப முயலும் காங்கிரஸ்வாதிகள் சிறுவர்களை அலட்சியம் செய்துவிட முடியாது. அன்னிய ஆட்சியைப் பலப்படுத்தும் கல்வியை, தெரிந்தோ தெரியாமலோ சிறுவர்கள் கற்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பக்கல்வியானது இந்தியாவின் கிராம நகரத் தேவைகளைப் பற்றிக் கவலை கொள்ளாத ஒரு கேலிக் கூத்துத்தான். அடிப்படைக் கல்வியானது சிறுவர்களின் உடலையும் உள்ளத்தையும் வளம்படுத்தி, பிறந்த மண்ணின்மேல் ஆசையையும் ஆர்வத்தையும் ஊட்டுகிறது. மேலும், 'எதிர்கால அமைப்பில் தனக்கும் ஒருபங்கு உண்டு' என்ற உண்மையைப் படிக்கும் காலத்திலேயே சிறுவர்களை உணரச்செய்துவிடுகிறது. காங்கிரஸ்காரர்கள் இதில் ஆர்வத்தோடு முனைந்து உழைத்தால், சிறுவர்களுடன் தாமும் பெரும்பயனடைவார்கள். சேவை செய்ய விரும்புகிறவர்கள், சேவா கிராமத்திலிருக்கும் தாலிமி சங்கக் காரியதரிசியிடம் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

8. வயது வந்தவர் கல்வி

இந்த விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் கவனம் செலுத்தவே இல்லை. இதில் அக்கறை கொண்டவர்களும் பாமரர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதோடு திருப்தியடைந்து விடுகிறார்கள். நான் மட்டும் வயது வந்தவருக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதனால், முதலில் இந்த நாட்டின் பரப்பையும் சிறப்பையும் அவர்கள் உணர்ந்து கொள்ளும்படிச் செய்வேன். கிராமத்தானுக்கு இந்தியா என்பது தன் கிராமமேதான். அவன் வேறு கிராமத்துக்குச் சென்றால் தன் கிராமத்தையே தன் தேசமாக எண்ணிப் பேசுகிறான். 'இந்தியா' என்றால் அவனுக்கு வெறும் பூகோள சாஸ்திரப் பதந்தான். கிராமத்திலுள்ள அறியாமையை நாம் இன்னும் உணரவில்லை. கிராம மக்களுக்கு அன்னிய ஆட்சியைப் பற்றிய விவரமும் அதன் கேடும் தெரியாது. கொஞ்சநஞ்சம் தெரிந்து கொண்டிருப்பதும் அன்னியரைப் பற்றிப் பயம் கொள்ளத்தான் செய்திருக்கின்றன. இதன் விளைவினால், அன்னியரைக் கண்டு நடுங்குவதும் அவரைப் பகைப்பதும் சகஜமாய்விட்டன. இதிலிருந்து மீளும் மார்க்கம் அவர்களுக்குத் தெரியாது. தங்களுடைய பலவீனத்தால்தான் அன்னியன் ஆட்சிசெலுத்துகிறான் என்பதையும், அன்னியர் ஆட்சியை ஒழிக்கக்கூடிய மகத்தான சக்தி தம்மிடமிருக்கிறது என்பதையும் அவர்கள் உணரவில்லை. நான் சொல்லும் க்ல்வி என்னவெனில், வாய் வார்த்தையினாலேயே உண்மையான அரசியல் அறிவு ஊட்டுவது என்பதுதான். இதில் பயமின்றித் திட்டம் வகுத்து வேலை தொடங்கலாம். இந்தக் கல்வி முறையை அதிகார வர்க்கம் தடுக்கக்கூடிய காலமும் காலாவதியாய்விட்டது. அப்படியும் அவர்கள் தடை செய்தால், இந்த ஆரம்ப உரிமையை, சுயராஜ்யத்துக்கு முக்கியமான இந்த உரிமையைப் பெறப் போராடியே தீரவேண்டும். இதுவரை நான் எழுதியுள்ள எல்லா விஷயங்களும் பட்டவர்த்தமானவை. அஹிம்சை அச்சத்தையும் ரகசியத்தையும் ஒதுக்கித்

தள்ளி விடுகிறது. வாய்ப் படிப்போடுகூட, எழுதப் படிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே ஒரு தனி முறை. கல்விப் பயிற்சிக் காலத்தைக் குறைப்ப தற்குப் பல முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். காங் கிரஸ் காரியக் கமிட்டியாரால் தாற்காலிகமாகவோ நிரந் தரமாகவோ நிபுணர்களை நியமித்து, இந்தக் கருத்துக்கு உருவம் கொடுத்து, ஊழியர்களை ஊக்கத்தோடு உழைக் கச் செய்ய வேண்டும். இங்கு நான் கூறியதெல்லாம் வழியைத்தான் காட்டுகிறதே யன்றி ஒரு சாதாரணக் காங்கிரஸ்காரர் இதில் எப்படிப் புகுந்து உழைப்பது என்பதைக் குறிப்பிடவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். மேலும் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் இப்பெரும் சேவைக்கு லாயக்கானவர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், ஆசிரியர்களாயுள்ள காங் கிரஸ்காரர்களுக்கோ, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முறையை ஒட்டிக் கல்வி யறிவு புகட்டுவது கஷ்டமா யிராது.

———

9. பெண்கள்

சத்தியாக்கிரகத்தின் மூலம் இந்திய மாதர்கள் எவ்வளவோ சுதந்திரம் அடைந்திருக்கிறார்கள். அதுவும் குறுகிய காலத்தில்! எனினும் காங்கிரஸ்காரர்கள் சுதந்திரப் போராட்டத்தில் தம்மைப்போல் பெண்களுக்கும் பங்கு உண்டு என்பதை உணரவில்லை. ஆகவே மாதர் சேவையையும் நிர்மாணத் திட்டத்தில் சேர்த்திருக்கிறேன். சேவா தர்மத்தில் பெண்கள்தான் உற்ற துணையாய் நின்று உதவவேண்டும் என்பதை ஆண்கள் உணரவில்லை. சட்டத்துக்கும் சமூகத்துக்கும் பெண்களை அடிமைப்படுத்தி வைப்பதற்கு மனிதனே பொறுப்பாளி; பெண்கள் இல்லை. அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு திட்டத்தில் ஆணுக்குத் தன் விதியை நிர்ணயிக்க உரிமை இருப்பதுபோல் பெண்ணுக்கும் உரிமையுண்டு. அஹிம்ஸா தர்ம சேவையில், கடமையைச் சரிவரச் செய்வதின் மூலந்தான் பலன் கிடைக்கும். ஆகவே ஆண் பெண் சமூகத்தின் பரஸ்பர ஒற்றுமையும் ஆலோசனைகளும் அங்கு பயன்பட வேண்டும். அவைகளை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவந்து புகுத்தக் கூடாது. தாங்கள் பெண்களிடம் நடந்துகொள்ளும் முறைமையை இன்றும் ஆண்கள் உணரவில்லை. பெண்களை நண்பர்களாகவும் கூட்டாளிகளாகவும் கருதுவதற்குப் பதிலாக, அவர்களுக்குத் தங்களை எஜமானர்களாகவும் நாயகர்களாகவும் கருதுகிறார்கள். பெண்களைக் கைகொடுத்து முன்னேற்றுவது காங்கிரஸ்காரர்களின் வேலை. விடுதலை பெறுவது எப்படி என்று தெரியாத பழங்கால அடிமைகளைப் போலத்தான் இன்று பெண்களும் இருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்தபோது பூர்விக அடிமை என்ன செய்வதென்று தெரியாது திகைத்தான். 'பெண்கள் ஆண்களின் அடிமைகள்' என்ற உணர்ச்சியைத்தான் பெண்களுக்குப் புகட்டி வந்திருக்கிறார்கள். தங்களுடைய முழுச் சக்தியையும் அவர்கள் உணர்ந்து ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாக உழைக்கச் செய்யவேண்டியது காங்கிரஸ்காரர் வேலை.

மனத்தைச் சரிக்கட்டினல், இம்மாறுதல் சுலபமானது. இதைக் காங்கிரஸ்காரர்கள் முதலில் தங்கள் வீடுகளிலேயே ஆரம்பிக்கட்டும். மனைவியர் என்ருல் விளையாட்டுப் பொம்மை, போகப் பொருள் என்ற எண்ணம் மாறி, பொதுச் சேவையில் கௌரவம் வாய்ந்த தோழர்கள் அவர்கள் என்று கருதவேண்டும். சாதாரணக் கல்வியறிவுகூடப் பெருத பெண்கள் தங்கள் கணவர்களிடமிருந்து எவ்வளவு விஷயம் தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவும் தெரிந்துகொள்ள வேண்டும். தாய்மார்களும் புத்திரிகளும் தங்கள் புத்திரரிடத்திலிருந்தும் தந்தையரிடத்திலிருந்தும் முறையே கற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு நேரமும் நான் ஒரு சாரிக் கருத்துக்களையே எடுத்துக் காட்டியிருக்கிறேன். கிராமங்களில் பெண்கள் ஆண்களோடு சமமாக வாழ்வதுமட்டுமன்றி, சில விஷயங்களில் புருஷர்களையே ஆட்சி கொள்ளுகிருர்கள் என்பதும் எனக்குத் தெரியும். பாரபக்ஷமற்றவனல் சட்டம் சமூகம் இவற்றின் பேரால் பெண்களுக்கு இன்றைக்கு அந்தஸ்து குறைவுபட்டிருக்கிறது என்பதை உணர முடியும். அதை அடியோடு மாற்றவேண்டும் என்பதும் புரியும்.

10. ஆரோக்கியமும் அதன் கல்வியும்

கிராமச் சுகாதாரத்துக்கென்று தனித் தலைப்பு கொடுத்தபின்பு, சுகாதாரக் கல்விக்கு என் இன்னொரு தலைப்புக் கொடுக்கவேண்டும் என்ற கேள்வி எழலாம். இரண்டையும் அதனோடு சேர்த்து எழுதியிருக்கலாம். ஆனால், நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. சுகாதாரத்தைப் பற்றி மட்டும் கூறிவிட்டால் ஆரோக்கிய அறிவும் அதனோடு அடங்கிவிடாது. சுகாதார அறிவு பெறுவதும் ஆரோக்கியமாக வாழ்வதும் தனிக் கல்வி ; அதற்கு அனுஷ்டானமும் தேவை. சிறந்த சமூகத்தில் சுகாதார விதிகளை மக்கள் அறிந்து அதன்படி நடப்பார்கள். மனிதவர்க்கத்துக்கு நேரும் பல வியாதிகளுக்குக் காரணம் இப்படிப்பட்ட விதிகளை அறியாததும், அறிந்திருந்தும் அனுஷ்டிக்காததும்தான். இந்நாளில் நம் நாட்டில் பலபேர் மரணமடைவதற்கு வறுமையே காரணம்; எனினும் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் அறிந்து கொண்டால் மரணத் தொகையைக் குறைக்க முடியும்.

உடல் ஆரோக்கியமாயிருந்தால் உள்ளமும் ஆரோக்கியமாயிருக்கும் என்பது மனித வர்க்கத்தின் முதல் சட்டம். ஆரோக்கியமான தேகத்தில், ஆரோக்கியமான இதயமும் இருப்பது கண்கண்ட உண்மை. உடலுக்கும் உள்ளத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நல்ல மனம் மட்டும் நமக்கு இருந்தால், ஹிம்ஸையை ஒதுக்கி, சுகாதார விதிகளைக் கடைப் பிடிப்போம். எவ்விதச் சிரமுமின்றி ஆரோக்கியமாயிருக்கலாம். ஆதலால், எந்தக் காங்கிரஸ்காரரும் நிர்மாணத் திட்டத்தின் இந்த அம்சத்தை நிராகரிக்கமாட்டார் என்று நம்புகிறேன். அடிப்படையான ஆரோக்கிய விதிகள் சுலபமானவை; லகுவில் அறிந்துகொள்ளக் கூடியவை. அனுஷ்டிப்பதுதான் கஷ்டம். அவை கீழே தரப்பட்டுள்ளன :

கெட்ட எண்ணங்களை ஒழித்து மனசில் நல்ல எண்ணங்களை நினைக்கவேண்டும்.

இரவும் பகலும் சுத்தமான காற்றை உட்கொள்ள வேண்டும்.

உடலையும் உள்ளத்தையும் நிதானத்தோடு உழைப்பில் ஈடுபடுத்தவேண்டும்.

நேராக நிற்கவும், நேராக உட்காரவும் வேண்டும். பரிசுத்தமாகச் செயலிலும் சிந்தையிலும் இருக்க வேண்டும்.

பிறர் சேவைக்காக வாழவேண்டும் என்பதற்காக உணவு உட்கொள்ளவும். சுகபோகத்திற்காக உணவு உட்கொள்ளக்கூடாது. ஆதலின் உடலையும் உள்ளத்தையும் நல்ல நிலையில் வைப்பதற்கு ஆகாரம் போதுமானதாயிருக்கவேண்டும்.

உண்பதைப் பொறுத்துத்தான் மனிதத் தன்மையும் உண்டாகிறது.

நீர், காற்று, ஆகாரம் எல்லாம் சுத்தமாயிருக்க வேண்டும். நீங்கள் சுத்தமாயிருந்துவிட்டால் மட்டும் திருப்தி ஏற்பட்டுவிடாது. சுற்றுப்புறமும் சுத்தமாயிருக்கச் செய்யவேண்டும்.

11. மாகாண பாஷைகள்.

நமது தாய்மொழியைக் காட்டிலும், ஆங்கில மொழியில் நாம் கொண்ட மோகத்தால், இன்று படித்தவர்கள் அரசியல் ஆர்வமுடைவர்கள் முதலியோருக்கும், பொது மக்களுக்கும் இடையே பெரிய ஆழமான இடைவெளி உண்டாகிவிட்டது. இந்திய பாஷைகள் வறுமையுற்று வதங்குகின்றன. புத்தம் புதுக் கருத்துக்களைத் தாய் மொழியில் சொல்லுவதற்கு முயலும்போதெல்லாம் நாம் திணறிப் போகிறோம். பௌதிகப் பதங்களுக்குச் சரி சமானமான வார்த்தைகள் இல்லை. இதன் விளைவு மோசமானது. நவீன மனப்பான்மையுடன் பொதுமக்கள் ஒட்ட முடியாமல் எட்டியே நிற்கிறார்கள். இப்பெரும் பாஷைகளின் அலட்சியத்தால் பாரதத்துக்கு நாம் இழைத்து விட்ட தீமையைச் சரிவர உணரக்கூடிய நிலைக்கு வந்து விட்டோம். இந்தத் தீமையை விலக்கினாலன்றி, நாம் பொதுஜன ஹிருதயத்தைக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க முடியாது என்பதை நாம் லகுவில் உணர்ந்து கொள்ளலாம். சுயராஜ்ய நிர்மாணத்தில் பொதுமக்கள் பண்டமாய் ஒன்றும் சாதித்துவிட முடியாது. அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சுயராஜ்யத்தில் ஒவ்வொருவரும் சுதந்திர இயக்கத்தில் நேரடியாகத்தான் கலந்து கொள்ள முடியும். போராட்டத்தின் தத்துவார்த்தங்கள் எல்லாவற்றையும் முறையாக உணர்ந்தாலன்றி, பொதுமக்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், ஒவ்வொரு முறையையும் அவர்களுடைய தாய் பாஷையிலேயே கற்றுக்கொடுத்தாலன்றி, இதெல்லாம் முடியாத காரியம்.

12. தேசிய பாஷை.

மேலும் இந்திய மக்கள் அனைவரும் தமக்குள் உறவு கொள்வதற்கும் ஒரு பாஷை வேண்டும். அந்த பாஷை ஏற்கெனவே பெரும்பான்மையான மக்கள் வழக்கிலிருப்பதும், பிறர் லகுவில் கற்றுக்கொள்ளக் கூடியதுமாயிருத்தல் வேண்டும். ஹிந்திதான் இம்மாதிரியான பாஷை என்பதை எவரும் மறுக்கமுடியாது. வடக்கிலுள்ள இந்து முஸ்லிம் அனைவரது பேச்சிலும் வழக்கிலும் ஹிந்தி இருந்து வருகிறது. பாரசிக லிபியிலே எழுதப்பெற்றால் அதை உருது என்கின்றனர். 1925-ம் வருஷம் கூடிய கான்பூர் காங்கிரஸில் இதற்கு ஹிந்துஸ்தானி என்று பெயரிட்டார்கள். அந்த நாள் முதல், பெயரளவிலாவது, ஹிந்துஸ்தானியே தேசிய பாஷை (ராஷ்டிர பாஷை)யாக இருந்து வருகிறது. 'பெயரளவில்' என்று நான் சொல்வதற்குக் காரணமுண்டு. ஏனெனில் காங்கிரஸ்காரர்கள்கூட இம்மொழியைச் சாதனை செய்யவில்லை. பொதுமக்களுக்கு அரசியலறிவு ஊட்டுவதற்காக, இந்திய பாஷைகளின் முக்கியத்துவத்தை உணர வேண்டுமென்றும், அரசியலறிவு கொண்ட பாரதத்தோடு பல மாகாணக் காங்கிரஸ்காரர்களும் தொடர்பு கொள்வதற்கும், அகில இந்திய காங்கிரஸ் கூட்டங்களில் சந்தித்து அபிப்பிராயம் பரிமாறிக்கொள்வதற்கும் ஒரு பொதுவான தேசிய பாஷை வேண்டுமென்றும், உணர்த்துவதற்காக 1920-ம் ஆண்டு பெருமுயற்சி எடுக்கப்பெற்றது. அம்மாதிரியான தேசிய பாஷையை எழுதவும் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ள வசதி ஏற்படவேண்டும்.

இந்தத் தீர்மானத்தைப் பல காங்கிரஸ்காரர்கள் சாதனையில் நிறைவேற்றத் தவறிவிட்டதைக் குறித்து நான் வருந்துகிறேன். பல காங்கிரஸ்காரர்கள் ஆங்கிலத்திலே பேசுவதும், தங்கள் சௌகரியத்துக்காகப் பிறரையும் ஆங்கிலத்திலே பேசச் சொல்லுவதும் வெட்கந்தரும் விஷ

யம் என்பது என் அபிப்பிராயம். ஆங்கிலமொழி போட்ட சொக்குப்பொடி இன்னும் மறையவில்லை. அந்த மயக்கத்தில் இந்தியா தன் லட்சியத்தை நோக்கி முன்னேறுவதை நாம் தடை செய்கிறோம். ஆங்கிலம் கற்க எத்தனை மாதங்கள் செலவழித்தோமோ அத்தனை மாதங்கள்கூட ஹிந்துஸ்தானி கற்கச் செலவழிக்க வில்லையென்றால், இந்திய மக்களிடம் நாம் கொண்டுள்ள அன்பு ஆழமற்றதுதான் என்றே அர்த்தம்.

13. பொருளாதார சமத்துவம்

சாத்விக முறை சுதந்திரத்துக்குத் திறவுகோல் போன்றது. பொருளாதார சமத்துவத்துக்காகப் பாடுபடுவது என்பது, முதலாளிக்கும் தொழிலாளிக்கு முள்ள வர்க்கப்போரை ஒழிப்பதென்றே அர்த்தம். அதாவது தேசத்தின் செல்வத்தில் பெரும் பாகத்தைத் தம் வசம் கொண்ட சிறுபான்மையோரான பணக்காரர் களை மட்டந்தட்டி, அதன் மூலம் உணவும் உடையுமின்றி அவதிப்படும் லக்ஷக்கணக்கான மக்களைக் கைதூக்கி விடுவதாகும். பணக்காரர்களுக்கும் பட்டினி கிடக்கும் பாட்டாளி மக்களுக்கும் இடையிலுள்ள அகாத இடை வெளி மறைந்தாலன்றி, அஹிம்ஸா முறையில் அரசாட்சி நடத்த முடியாது. புது டெல்லியிலுள்ள அரண்மனைக ளுக்கும், அவற்றின் பக்கத்திலேயுள்ள ஏழைப் பாட்டாளி மக்களின் மோசமான குடில்களுக்குமுள்ள வேற்றுமை யானது, பணக்காரனைப்போல ஏழையும் சுதந்திர இந்தி யாவின் செல்வாக்குப் பெறும் அந்த நாளில் மறைந்து விடும்.

பொதுநலத்துக்காகப் பணக்காரர்களின் செல்வத் தைப் பங்கிட்டுக்கொடுத்தாலன்றி என்றேனும் ஒருநாள் பயங்கரமான ரத்தப் புரட்சி ஏற்படுவது நிச்சயம். நான் கூறும் 'ஏழை பரிபாலன முறை'யைப் பலர் ஏளனம் செய்த போதிலும் நான் அதைப் போற்றியே வருகி றேன். அதை அடைவது கஷ்டமென்பது வாஸ்தவம்; அதனாலேயே அஹிம்ஸா தர்மமும். எனினும் 1920-ல் இந்தச் செங்குத்தான முயற்சியிலும் முன்னேறியே தீருவது என்று நாங்கள் தீர்மானித்துக்கொண்டோம்.

அஹிம்ஸா முறையின் முயற்சிகளும் வளர்ந்தே வரு கின்றன. அஹிம்ஸா முறையின் காரண காரியங்களைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் தாமாகவே சிந்தித்து ஆராய்ந்து தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இன் றைக்குள்ள ஏற்றத் தாழ்வுகளை ஸாத்விகத்தாலாவது, பலாத்காரத்தாலாவது எப்படி ஒழிக்க முடியும் என்று

சிந்தித்துப் பார்க்கட்டும். பலாத்கார முறையைப் பற்றி நமக்கு ஏற்கெனவே தெரியும். எங்கும் அது வெற்றி பெறவில்லை.

இன்றைய ஸாத்விக சோதனை பரிசோதனையில்தான் இருக்கிறது. சாதனை முறையில் நாம் பிரமாத வெற்றி யடைந்து விட்டோம் என்று சொல்ல முடியாது. எனினும், சமத்துவத்தை நோக்கி மெதுவாகவேனும் முன்னேறி உழைக்க இம்முறை ஆரம்பித்துவிட்டது என்பது மட்டும் நிச்சயம். மேலும் அஹிம்ஸை என்பது ஒரு மாறுதல்தான். அந்த மாறுதலை அடைந்தால், அது நிரந்தரமாயிருக்கவேண்டும். அஹிம்ஸா முறையில் ஸ்திரப்படுத்தப்பட்ட ஒரு சமூகமோ ஒரு இனமோ உள்நாட்டு எதிர்ப்பையும் வெளிநாட்டுத் தாக்குதல்களையும் சமாளிக்கச் சக்தி படைத்திருக்கவேண்டும்.

நம்மிடம் பணம் படைத்த காங்கிரஸ்காரர்கள் உண்டு. அவர்கள் வழிகாட்ட வேண்டும். இந்தப் போராட்டந் தான் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் இதய பூர்வத்தோடு உழைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கிறது. சமத்துவத்தை என்றேனும் அடைந்தே தீரவேண்டும் என்று நாம் கருதினால் அதற்கு இன்றே அஸ்திவாரம் கோல வேண்டும். பெரும் சீர்திருத்தங்களைச் சுயராஜ்யம் வந்த பின் முடிவுகட்டிக்கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள் அஹிம்ஸை முறையில் சுயராஜ்யம் அடையும் தன்மையை அறியாது ஏமாறுபவர்கள்.

சுதந்திரம் திடீரென்று வானத்திலிருந்து குதித்து விடக்கூடிய சரக்கல்ல. சமூகத்தின் சுய முயற்சியினால் சிறிது சிறிதாக நிறுவப்பட வேண்டிய விஷயம். இம்முறையில் நாம் குறிப்பிடக்கூடிய அளவுக்கு முன்னேறியே யிருக்கிறோம். எனினும் சுதந்திர ஜோதியை எட்டுவதற்கு நாம் இன்னும் நீண்ட வழி செல்லவேண்டியிருக்கிறது. பொருளாதார சமத்துவத்துக்காக நாம் எவ்வளவு உழைத்திருக்கிறோம் என்பதை ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தம்மைத் தாமே கேட்டுத் தெளிந்து கொள்ள வேண்டும்.

---

14. விவசாயிகள் (கிஸான்)

இந்தத் திட்டம் விரிவானதல்ல. சுயராஜ்யம் ஒரு மகத்தான கட்டுக்கோப்பு. எண்பது கோடிக் கரங்களின் ஒத்துழைப்பினாலேயே இதை எழுப்ப முடியும். அவைகளில் விவசாய சமூகமே பெரும் பகுதியாகும். வாஸ்தவத்தில் அவர்களில் பெரும்பகுதி (சுமார் 80 சதவிதம்) காங்கிரஸிலிருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை.

அவர்கள்மட்டும் தம்மிடமுள்ள சாத்விக சக்தியை உணர்ந்துவிட்டால், உலகிலுள்ள எந்தச் சக்தியும் அவர்களைத் தடைசெய்ய முடியாது. அரசியல் அதிகாரம் பெறுவதற்காக அவர்களைப் பயன்படுத்திக் கொள்வது தவறு. அஹிம்ஸா முறைக்கே அது முற்றும் விரோதமானது என்பது என் எண்ணம். விவ்சாயிகளைச் சங்க முறையில் கூட்டுவதற்கு என் வழியை அறிய விரும்புகிறவர்கள் முதன் முதலாக சத்தியாக்கிரஹ முறையைப் பரிசோதித்த 'சம்பரான் சத்தியாக்கிரஹ' வெற்றிச் சரித்திரத்தை நன்கு அறிந்துகொள்வது நலம். ஆரம்பம் முதல் முடியும் வரையிலும் சாத்விக முறை வழுவாத பொதுஜன இயக்கமாகவே அது விளங்கியது. அது இருபது லக்ஷம் விவசாயிகளுக்குமேல் பாதித்தது. நூறு வருஷ காலமாய் இருந்துவந்த அநீதியை அழிப்பதற்காகவே அந்தச் சத்தியாக்கிரஹம் எழுந்தது. அந்த அநீதியைத் தொலைப்பதற்குப் பல பலாத்காரப் புரட்சிகளும் எழுந்தன. அவைகளால் விவசாயிகள் நசுக்கப்பட்டார்கள். அஹிம்ஸா முறையிலோ ஆறு மாதங்களிலேயே பூர்ண வெற்றி கிடைத்தது.

சம்பரான் பிரதேசத்து விவசாய மக்கள் எந்த விதத் தூண்டுதலுமின்றியே அரசியல் உணர்ச்சி பெற்றனர். அஹிம்ஸா பூர்வமாகத் தமது குறைகளை நிவர்த்தித்துக் கொண்டதால், அவர்கள் காங்கிரஸால் ஆகர்ஷிக்கப்பட்

டார்கள். மேலும் கடந்த சட்டமறுப்பு இயக்கங்களில் கலந்து, பாபு ராஜேந்திரப் பிரசாத், பாபு விரிஜ்கிஷோர் பிரசாத் தலைமையில் எவ்வளவோ சாதித்திருக்கிறார்கள்.

மேலும் கேடா, பர்தோலி, போர்சாத் முதலிய இடங்களிலுள்ள விவசாய இயக்கத்தைப் பற்றியும் வாசகர்கள் அறிந்துகொள்வது நலம். விவசாயிகளின் சொந்தக் குறைகளுக்குப் புறம்பான அரசியல் விவகாரங்களுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதைமட்டும் ஒதுக்கி விட்டால் அரசியல் வெற்றிகளின் மர்மம் வெளிப்பட்டு விடும். குழப்பபடியற்ற முறையில் ஸ்தாபனத்தைப் பற்றி அவர்களுக்கு விளங்கச்சொல்ல வேண்டும். அவர்களுக்கு அஹிம்ஸா தர்மத்தைப்பற்றிய போதனைகள் தேவையில்லை. நம்மூலம் அஹிம்ஸா முறையைச் சாதனமாகக் கொண்டு அவர்கள் உழைக்கட்டும். பிறகு அஹிம்ஸையின் மூலந்தான் அவர்களுக்கு வெற்றி கிட்டியது என்பதைத் தெரிவித்து விட்டால், அதைப் புரிந்துகொள்வது அவர்களுக்குச் சுலபமாய்விடும்.

இந்த விளக்கங்கள் மூலம் அக்கறையுள்ள காங்கிரஸ்காரர்கள் விவசாயிகளுக்காகத் தாம் எப்படி உழைக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள முடியும். விவசாயிகளை ஒன்றுதிரட்டச் சில காங்கிரஸ்காரர்கள் கையாண்ட முறை வெற்றியடையாததோடு இன்னலுக்கும் உட்படுத்தி விட்டது என்பதையும் நான் அறிவேன். எந்த விதத்திலும் அவர்கள் சாத்விக சாதனையில் இறங்கவில்லை. தாங்கள் அஹிம்ஸா முறையை நம்பவில்லை என்பதை அந்த ஊழியர்கள் பட்டவர்த்தனமாகச் சொல்லிக் கொள்ளட்டும். அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு நான் உபதேசிப்பது இதுதான். காங்கிரஸின் பெயரை உபயோகிக்காமலும், காங்கிரஸ்காரர்கள் என்று தம்மைச் சொல்லாமலும் அவர்கள் இருக்கட்டும்.

இப்போதாவது வாசகர்கள் நான் ஏன் விவசாயிகளையும், தொழிலாளிகளையும் அகில இந்திய அடிப்படையில் ஒன்று கூட்டுவதிலிருந்து விலகி நிற்பதேன் என்

பதை உணர்ந்து கொள்வார்கள். எல்லாச் சக்திகளும் ஒரே முகமாய் உழைக்கவேண்டும் என்பது என் விருப்பம். எனினும் நம் நாட்டைப்போன்ற பெரிய கண்டத்தில் இது அசாத்தியமானது. எனினும் அஹிம்ஸா தர்ம ரீதியில் எந்தவித பலவந்தமும் கிடையாது. நியாயம் பிறழாத முறையில் நாம் அஹிம்ஸா தர்மத்தைச் சாதனை செய்து வந்தால், பிறரும் தாமாகவே வேலையில் முனைய முன் வருவார்கள்.

தொழிலாளிகளைப் போலவே விவசாயிகளின் தனிப்பட்ட குறைகளைக் கவனிப்பதற்கென்றே காங்கிரஸின் கீழ் ஒரு தனிப்பிரிவு அமைக்கப்படவேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.

15. தொழிலாளிகள்

அஹமதாபாத் தொழிலாளர் சங்கத்தை இந்தியா முழுமைக்கும் முன் மாதிரியாகக் கொள்ளலாம். அஹிம்ஸை, தூய்மை இவைகளின் அடிப்படையில் எழுந்தது அது. என்றைக்கும் தன் முயற்சியில் அது பின் வாங்கியதில்லை. பரபரப்பும் படாடோபமுமின்றி அது நாளுக்குநாள் பலம் பெற்று வருகிறது. ஆஸ்பத்திரி, மில் தொழிலாளிகளின் குழந்தைகளுக்குத் தனிக் கல்விச்சாலைகள், வயது வந்தவர்களுக்குக் கல்விவசதி, அச்சகம், கதர்க்கடை, குடியிருப்புகள் எல்லாம் சொந்தத்திலேயே இருக்கின்றன. அநேகமாக எல்லாத் தொழிலாளிகளுக்கும் ஓட்டுரிமை உண்டு; தேர்தல் முடிவை அவர்களே நிர்ணயிக்கிறார்கள். மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின்மூலம் அவர்கள் ஓட்டுரிமை பெற்றார்கள். காங்கிரஸின் அரசியல் வகுப்புவாதங்களில் அந்தச் சங்கம் என்றும் கலந்துகொண்டதில்லை. இச்சங்கம் நகரசபையின் நிர்வாகத்திலும் கொள்கைகளிலுங்கூடச் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. பூர்ண அஹிம்ஸாதர்மத்தின்மூலம் வெற்றிகரமான வேலை நிறுத்தங்கள் செய்திருக்கிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்படும் தகராறுகளை இருதரப்பாரும் ஒத்துச் சேர்ந்து தீர்த்துக்கொள்கிறார்கள்.

எனக்குமட்டும் அதிகாரமிருந்தால் இந்தியாவிலுள்ள எல்லாத் தொழிற் சங்கங்களையும் அஹமதாபாத் சங்க முறையிலேயே அமைப்பேன். இந்தச் சங்கம் அகில இந்தியத் தொழிற் சங்க மகாசபையுடன் கலக்கவோ, கைப்பற்றவோ முயற்சி செய்ததில்லை. அஹமதாபாத் சங்க முறையை அகில இந்தியத்தொழிற்சங்கம் ஒப்புக்கொள்வதோடு, அஹமதாபாத் ஸ்தாபனத்தை அகில இந்தியச் சங்கத்தின் அங்கமாகக் கருதக்கூடிய காலமும் வந்தே தீரும் என்பது என் நம்பிக்கை. எனினும் நான் அவசரப்படவில்லை. எல்லாம் காலக்கிரமத்தில் தானே நடக்கும்.

16. ஆதிவாசிகள்.

ராணிபராஜ் என்ற பெயரைப் போலவே ஆதிவாசி என்பதும் ஒரு புதுப் பதச்சேர்க்கை. ராணிபராஜ் என்பது காலிபராஜ் என்பதற்கென ஏற்பட்டது. (அதாவது மற்றவர்களைப்போல் அவர்கள் இவ்வளவு கறுப்பாயிராவிட்டாலும், அந்தக் கறுப்பு நிறத்தால் ஏற்பட்ட பெயர்தான் அது.) ஸ்ரீ. ஜுகத்ராம் தான் இந்தப் பெயரைச் சூட்டினார் என்று நினைக்கிறேன். ஆதிவாசி என்ற பதத்திற்கு—மலை வாசிகளென்றும், பூர்வ குடிகளென்றும் சொல்லப்படும் பில்லர்கள் கோண்டர்கள் முதலியவர்களைக் குறிக்கும் இந்தப் பதத்திற்கு—பூர்வ குடிகள் என்றே அர்த்தம். இந்த வார்த்தை தக்கர் பாபாவின் சிருஷ்டி என்று நினைக்கிறேன்.

ஆதிவாசிகளுக்குப் பணிவிடை செய்வதும் நிர்மாணத்திட்டத்தின் ஓர் அம்சம். அவைகள் எண்ணிக்கையில் பதினாறாயிருந்தாலும், அவைகளில் ஒன்றும் முக்கியமற்றதல்ல. பரந்த விஸ்தீரணம் படைத்த நமது நாட்டில், எத்தனையோ விதமான இனங்கள். அவர்களின் நிலைமையையும் இனங்களைப்பற்றியும் அறிந்து கொள்வது நம்மில் பலருக்கும் முடிவதில்லை. இந்த உண்மையை மட்டும் தனக்குத்தானே ஒவ்வொருவரும் மனசில் கொண்டால், நாமெல்லாம் ஒரே இனம் என்று உரிமை கொண்டாடுவதிலுள்ள சிரமம் தெரியும். மேலும், ஒவ்வொரு இனமும் மொத்த இனத் தொகுதியில் தானும் ஒன்றுதான் என்ற உணர்ச்சியைப் பெற்றாலன்றி இது அசாத்தியம்.

ஆதிவாசிகள் இன்று இந்தியாவில் இரண்டு கோடிக்கு மேலிருக்கிறார்கள். குஜராத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே தக்கர் பாபா பில்லர்களுக்கு உழைத்தார். 1940-ம் வருஷத்தில் ஸ்ரீ பால ஸாஹெப் கெர் தம்முடைய முழுச் சக்தியுடன் தாணு ஜில்லாவில் உழைக்க ஆரம்பித்தார். தற்போது அவர்தான் 'ஆதிவாசிஸேவா மண்டல'த்துக்குத் தலைவர்.

இதுபோலவே இந்தியாவின் பல பாகங்களிலும் ஊழியர்கள் இருக்கிறார்கள். எனினும் அவர்கள் ஒரு சிலர்தான். "'கூலியாட்கள் குறைந்த போதிலும் அறுவடை அதிகந்தான்'' என்பது பழமொழி. ஆதலால், இந்தச் சேவை உண்மையான சுதந்திரப்பாதையில் நம்மைத் துரிதப்படுத்தும், தேசியமும் மனுஷத்துவமும் படைத்த பணி என்பதை யாரே மறுக்க முடியும்?

---

17. குஷ்டரோகிகள்

குஷ்டரோகி என்ற வார்த்தையே அசங்கியமானது.

மத்திய ஆப்பிரிக்காவுக்கு அடுத்தபடி இந்தியாவிலேதான் குஷ்டரோகிகள் ஜாஸ்தியாயிருக்கிறார்கள். எனினும் அவர்களும் நம் சமூகத்தின் ஒரு பகுதி; உயர்ந்தவர்கள்போலவே ஒரு பகுதி. உயர்ந்தவர்களுக்கு ஒரு சிறிதே உதவி தேவையாயிருப்பினும், அவர்களே நம் கவனத்தைக் கவருகிறார்கள். அதிகமான உதவியை நாடும் குஷ்டரோகிகளைப்பற்றிப் பலர் அக்கறைகொள்வதில்லை. அஹிம்ஸையின் பேரால் அவர்களைக் கல் நெஞ்சர்கள் என்றுதான் என்னால் கருதமுடியும். பாதிரிகளே இதில் ஓரளவு நல்ல சேவை செய்கிறார்கள். பரிசுத்தமான அன்போடு ஒரு இந்தியனால் நடத்தப்படும் ஸ்தாபனம் ஒன்று இருக்குமெனில், அது வர்தா பக்கத்திலுள்ள ஸ்ரீ மனோஹர திவானுடைய நிலயந்தான். அது ஸ்ரீ விநோபா பாவேயின் ஆர்வத்தாலும், தூண்டுதலாலும் நடைபெற்று வருகிறது. இந்தியா மட்டும் புத்துயிர் பெற்றுத் துடித்தால், சத்தியமும் சாத்விகமும் நிறைந்த முறைகளில் இந்திய சுதந்திரத்தைத் துரிதப்படுத்த முனைந்தால், இந்தியாவில் ஆதரவும் கவனிப்புமற்ற ஒரு குஷ்ட ரோகியோ, ஏழையோ இருக்கவே கூடாது. இந்தத் திருத்திய பதிப்பில், நிர்மாணத் திட்டத்தில் ‘குஷ்டரோகி’யை விட்டுப்போன அம்சமாகக் கருதியே சேர்த்திருக்கிறேன். நவீன நாகரிக உலகத்தில் நாமும் வாழ்கிறோம், அவர்களும் நம்மைச் சுற்றி வாழ்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். பிற நாடுகளையும் பாருங்கள். அப்போதுதான் நம் சகோதரர்களின் நிலை தெரியவரும். அப்போதுதான் என் சொல்லும் செல்லுபடியாகும்.

---

18. மாணவர்கள்

கிடையாக மாணவர்களைப் பற்றிச் சொல்லுகிறேன். அவர்களோடு நான் நெருங்கிய தொடர்புடையவன். அவர்களும் என்னை அறிவார்கள்; நானும் அவர்களை அறிவேன். அவர்கள் என்னுடு ஒத்துழைத்தனர். பல பழைய மாணவர்களெல்லாம் என்னுடு உழைத்தவர்கள். அவர்கள்தான் எதிர்கால வாழ்வின் 'நம்பிக்கை'. ஒத்துழையாமைக் காலத்தில் அவர்களைக் கலாசாலை களை விட்டு வெளியேறச் சொன்னும். பல ஆசிரியர் களும், மாணவர்களும் காங்கிரசுக்குச் செவி சாய்த்து அதன்படியே வெளியேறினர்கள். பலர் இன்னும் உழைக்கிருர்கள்; நாட்டிற்கு நலனும் விளைத்திருக்கி ருர்கள். அந்த மாதிரியான அறைகூவல் மீண்டும் ஏற்படவில்லை; காரணம், சூழ்நிலை சரியில்லை. மேலும் இக்காலத்துக் கல்வி முறை பொய்க்கூத்தா யிருந்த போதிலும், இளைஞர்களுக்கு அதில் ஒரு மோகமிருக் கிறது. கல்லூரிப் படிப்பு ஜீவனோபாயத்திற்கு வழி காட்டுகிறது. சமூகத்தில் மேலானவர்களுடன் பழகுவ தற்கு வசதி யளிக்கிறது. அறிவை வளர்க்க வேண்டும் என்ற ஆசையையும் இந்தப் படிப்பின் மூலமாகத்தான் இப்போது தீர்த்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. தாய் மொழியைத் தள்ளி வைத்துவிட்டு, முற்றும் அன்னிய மான மொழியைக் கற்பதில் காலத்தை வீணுக்குகிருேமே என்று மாணவர்கள் நினைப்பதில்லை. இது ஒரு பாப காரியம் என்பதை உணர்வதில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் நவீன கலைகளையும் சாஸ்திரங்களையும் நாட்டு மொழியில் கற்க முடியாதென்று தீர்த்துக் கட்டி விட்டார்கள். ஆனல், ஜப்பானியரால் இது எப்படி முடிந் தது என்பது அதிசயமானதுதான். அவர்கள் கல்வி யெல்லாம் ஜப்பானிய மொழியிலேதான். சீனத் தலைவர் சியாங்கே ஷேக்குக்கு ஆங்கிலமே தெரியாது.

உதயமாகப் போகும் புது யுகத்தின் தலைவர்களான மாணவ மாணவிகளை இதற்காக மறந்துவிட முடியாது.

துரதிர்ஷ்ட வசமாக அவர்களைப் பல கொள்கையர்களும் குழப்படி செய்கிறார்கள். ஆதலின் அஹிம்ஸை அவர்களுக்கு அதிகக் கவர்ச்சி தருவதில்லை. வெட்டுக்கு வெட்டு, பழிக்குப்பழி என்பதுதான் அவர்களுக்கு லகுவில் பிடிபடுகிறது. அதனால் உடனடியான பலன் ஏற்படுவதுபோலத் தோன்றும்; எனினும் கண நேரந் தான். இன்று நடக்கும் யுத்தத்தில் மிருக பலந்தான் அமலிலிருக்கிறது; யுத்தத்தில் கலந்துகொண்டவர்கள் எல்லாம் மிருகங்களைப் போல் நடந்து கொள்கிறார்கள். அஹிம்ஸா தர்மத்தை அறிந்து போற்றுவதற்குப் பொறுமையான ஆராய்ச்சியும், சிரமமான சாதனையும் வேண்டும்; எந்தக் காரணத்திற்காக விவசாயிகளையும், தொழிலாளிகளையும் அடக்கியாள வேண்டும் என்று விரும்பவில்லையோ, அதே காரணத்திற்காகத்தான் மாணவர்களையும் நான் ஆதிக்கம் கொள்ள விரும்பவில்லை. ஆனால் நானும் ஒருவிதத்தில் மாணவன்தான். ஆனால் என்னுடைய கல்லூரி அவர்கள் கல்லூரிகளிலிருந்து வேறுபட்டது. என்னுடைய கல்லூரியில் எந்த நாளிலும் வந்து தாராளமாய்ச் சேர்ந்து, என் ஆராய்ச்சியில் உதவலாம். அதற்குரிய நிபந்தனைகள் இதோ உள்ளன.

1. மாணவர்கள் அரசியல் வகுப்பு வாதங்களில் கலக்கக்கூடாது. அவர்கள் மாணவர்கள், உண்மையைத் தேடுபவர்கள்; அரசியல் வாதிகள் இல்லை.

2. அரசியல் காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. தத்தமக்கென்று லட்சிய புருஷர்களைக் கொள்ளலாம். ஆனால், அந்த லட்சிய புருஷர்களிடமுள்ள நல்ல குணங்களைப் பின்பற்றுவதின்மூலம் தம் விசுவாசத்தைக் காட்டிக்கொள்ளலாமேதவிர, அவர்கள் சிறை செய்யப்பட்டார்கள், மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள், இறந்தோ போனார்கள் என்ற காரணங்களுக்காக எல்லாம் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. அம்மாதிரி வேளைகளில் மாணவர்களெல்லாம் அந்தத் துக்கத்தைத் தாங்க முடியாமலிருந்தால், பிரின்ஸிபலின் அனுமதி

பெற்றுக் கல்லூரியை மூடிவிட வேண்டும். அப்படியும் பிரின்ஸிபல் கேட்கவில்லையென்றால், கல்லூரி அதிபரே தவற்றை உணர்ந்து தம்மை அழைக்கும் முறையில், மாணவர்கள் கலாசாலையை விட்டு வெளியேறிவிட வேண்டும். எக்காரணங்கொண்டும் தங்களோடு ஒத்து வராதவர்களையும் அதிகாரிகளையும் நிர்ப்பந்தப்படுத்தக் கூடாது. தாங்கள் ஒற்றுமையாகவும் ஒழுக்கமாகவும் இருப்பதாகமட்டும் அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்பட்டால், வெற்றி அவர்களுக்குத்தான்.

3. அவர்களெல்லாம் நூல் நூற்கும் வேள்வியில் முறையாகக் கலந்துகொள்ள வேண்டும். நூற்கும் கருவிகளைச் சுத்தமாகவும், அழகாகவும், பழுதில்லாமலும் வைத்துக்கொள்ள வேண்டும். கூடுமானால் அக்கருவிகளைத் தாமே செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் நூற்கும் நூலே உயர்ந்த ரகமாயிருக்கும். அவர்கள் நூற்பதைப் பற்றிப் பொருளாதார சமூக அரசியல் கலப்புகளோடு அறிந்து கொள்வார்கள்.

4. எப்போதும் கதர் அணிய வேண்டும். முடிந்த வரையில் ஆலைப் பொருள்களையும் அன்னியச் சரக்குகளையும் விலக்கி, கிராமக் கைத்தொழில் பண்டங்களை உபயோகித்தல் வேண்டும்.

5. வந்தேமாதர கீதத்திலும், தேசியக் கொடி வணக்கத்திலும் பிறரை நிர்ப்பந்திக்கலாகாது. தேசியக் கொடி வரைந்த பொத்தான்களைத் தாங்கள் அணிந்து கொள்ளலாமேயன்றி, பிறரும் அதை அணியவேண்டும் என்று வற்புறுத்தலாகாது.

6. மூவர்ணக் கொடியின் தத்துவத்தை விளக்கிக் காட்டலாம். வகுப்புச் சண்டை, தீண்டாமை முதலியவற்றிற்கு இதயத்திலேயே இடந்தரக் கூடாது. ஹரிஜன மாணவர்களையும், ஏனைய மதஸ்தரான மாணவர்களையும், தம் சொந்த பந்து மித்திரர்களைப்போல் கருதிப் பழக வேண்டும்.

7. காயமடைந்தவர்களுக்குப் பிரதம சிகித்ஸை யளித்தல், பக்கத்துக் கிராமங்களைச் சுத்தம் செய்தல், குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் பாடம் கற்பித்தல் முதலியவற்றிலும் உழைக்க வேண்டும்.

8. தேசிய பாஷையாகிய ஹிந்துஸ்தானியை ஹிந்தி, உருது என்ற இரு உருவத்திலும் கற்கவேண்டும். அப்போதுதான் நாகரி அல்லது உருது லிபியே வழக்கி லிருந்தாலும் ஜனங்களோடு அவர்கள் தொடர்பு கொள்ள முடியும்.

9. வாரந்தோறும் கிராமங்களுக்குச் செல்லும் போது, அங்குள்ள மக்களுக்குப் புதிது புதிதாய்த் தாம் கற்கும் விஷயங்களைத் தாய் பாஷையில் மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டும்.

10. அவர்கள் வாழ்வில் ஒளிவு மறைவு கூடாது. அவர்கள் நடத்தை சம்சயத்துக்கிடமின்றி இருக்க வேண்டும். புலனடக்கம் கொண்ட கட்டுப்பாடுள்ள புனித வாழ்வும் வேண்டும். அச்சந் தவிர்க்க வேண்டும். ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும். தகராறுகளை அஹிம்ஸை முறையில் தீர்த்து வைக்க வேண்டும். உயிரைத் தியாகம் பண்ணவும் தயாரா யிருக்கவேண்டும். போராட்டத்தின் இறுதிக் கட்டம் வரும்போது அவசியம் நேர்ந்தால், கல்லூரிகளை உதறித் தள்ளிவிட்டு நாட்டின் சுதந்திரத்துக்காகத் தங்களைத் தியாகம் செய்யவும் தயாரா யிருக்க வேண்டும்.

11. தங்களுடன் கற்கும் மாணவிகளிடத்தில் நேர்மை யுடனும் கண்ணியத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தைச் சாதனையில் கொண்டுவர மாணவர்களுக்கு அவகாசம் கிடையாது. சோம்பேறித் தனத்திலேயே பெருங் காலத்தை அவர்கள் வீணுக்கு

இருர்கள் என்பதும் எனக்குத் தெரியும். கண்டிப்பான சிக்கனத்தால், அவர்கள் எவ்வளவோ நேரத்தை மிச்சம் பிடிக்கலாம். எனினும் எந்த மாணவன் மீதும் தாங்க முடியாத சுமையை நான் ஏற்ற விரும்பவில்லை. ஆதலால் தேச பக்தியுள்ள மாணவர்கள் தங்கள் கல்விக்குரிய காலத்தை ஒரு வருஷம் தள்ளிப் போட்டுக் கொள்ளட்டும். இந்த ஒரு வருஷமும் வீணாகி விடாது. உடல், உள்ளம், அறிவு மூன்றும் நன்கு அபி விருத்தியடையும்; மேலும் படிக்கும் காலத்திலேயே சுதந்திர இயக்கத்தில் நல்ல பங்கெடுத்துக்கொண்டவர்களாவார்கள்.

சட்ட மறுப்பு—அதன் ஸ்தானம்

நிர்மாணத் திட்டத்தில் நாட்டிலுள்ள மக்களனைவருடைய ஒத்துழைப்பும் கிட்டிவிட்டதானால், அஹிம்ஸா மார்க்கத்தில் சுதந்திரமெய்துவதற்குச் சட்ட மறுப்பு அவசியமில்லை. ஆனால் அந்த அதிர்ஷ்டம் ஏற்படுமென்று எதிர்பார்க்கக் கூடாது. ஆதலால், சுதந்திரப் போராட்டத்தில் சட்ட மறுப்புக்கும் ஒரு ஸ்தானம் அளிக்க வேண்டும். அது எப்படி என்று பார்க்கலாம். அதற்குரிய மூன்று ஸ்தானங்கள் இவை:

1. குறிப்பிட்ட ஸ்தலத்திலுள்ள குறைகளை நீக்கச் சட்டமறுப்பைக் கையாளலாம்.

2. குறிப்பிட்ட குறையை நீக்குவது நம் குறிக்கோளாயினும், பலனை எதிர் பாராமல் பொதுமக்களின் மனச்சாட்சியைத் தூண்டிவிடுவதற்காக, தியாக முறையில் சட்டமறுப்பைக் கையாளலாம். சம்பாரனில் நான் செய்த சத்யாக்கிரஹம் இம்மாதிரியானது. பலனையும் எதிர்பார்க்கவில்லை. ஜனங்களும் பராமுகமாயிருப்பார்கள் என்றும் எனக்குத் தெரியும். எனினும் பலன் கிடைத்தது. அதை அதிர்ஷ்ட யோகம் என்றோ, ஆண்டவன் கிருபை யென்றோதான் சொல்ல வேண்டும்.

நிர்மாண வேலையில் பூர்ண முயற்சி தடைப்படும் போது, 1941-ல் செய்த மாதிரி சட்டமறுப்பைக் கையாளலாம். இது சுதந்திரப் போராட்டத்தின் பகுதியே யாயினும் இதன் கோரிக்கை பேச்சுரிமை ஒன்றேதான். சட்டமறுப்பு என்பது சுதந்திரம் போன்ற பெரிய லட்சியங்களைக் குறிக்கோள்களாகக் கொள்ள முடியாது. நமது கோரிக்கை திட்ட வட்டமானதும், எளிதில் புரியக்கூடியதும், எதிரியால் விட்டுக் கொடுக்கக்கூடியதுமா யிருக்க வேண்டும். இம்முறையைக் கிரமமாக உபயோகித்தால் இறுதி லட்சியமும் கிடைத்துவிடும்.

இங்கு நான் சட்டமறுப்பின் தத்துவங்களையும், சாதனை முறைகளையும் பற்றி விளக்கவில்லை. ஆனல், நிர்மாணத் திட்டத்துக்கும் சட்டமறுப்புக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தம் பற்றி மட்டும் வாசகர்களுக்கு ஓரளவு கூறியிருக்கிறேன். முதல் இரண்டு நிலைகளிலும் சட்ட மறுப்பு விஷயமாக எந்த வித விஸ்தாரமான நிர் மாண வேலைகளும் அவசியமில்லை. ஆனல், சுதந்திரத்துக் கென்றே சட்டமறுப்பு ஏற்பட்டால், அதற்கு முன் கூட்டியே தயாராயிருக்க வேண்டும். யுத்தத்தில் கலந் துள்ளவர்களின் மனப்பூர்வமான பகிரங்க முயற்சி கிடைக்க வேண்டும். அப்படி ஏற்பட்டால், அது வீரர் களுக்கு ஊக்கம் அளிக்கும். எதிரிக்கோ, சவால் விடுங் கும். மேலும் சட்டமறுப்பின் மூலமாகவே சுதந்திரம் அடைவதாயின் கோடிக் கணக்கான ஜன சமூகமும் நிர்மாண வேலையில் ஈடுபட வேண்டும். அவ்வாறில்லாத சட்டமறுப்பு வெறும் பித்தலாட்டந்தான்; அதனல் கேடுதான் விளையும்.

முடிவுரை

இந்நூலைக் காங்கிரஸ் சார்பிலாவது, காங்கிரஸ் காரியாலயத்துச் சார்பிலாவது எழுதவில்லை. சேவாக் கிராமத்தில் என் சகபாடிகள் சிலருடன் சம்பாஷித்ததின் விளைவு இது. நிர்மாணத் திட்டத்துக்கும் சட்டமறுப்புக்குமுள்ள தொடர்பைப் பற்றியும், நிர்மாணத் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றியும் நான் எழுத வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் தேவையை இந்தச் சிறு நூலில் பூர்த்தி செய்திருக்கிறேன். இதில் விஸ்தாரமாக ஒன்றும் கூறவில்லையாயினும், திட்டத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர இவையே போதுமானது.

இதில் கண்ட திட்டங்களுக்கும், சுதந்திர இயக்கத்துக்கும் என்ன சம்பந்தமென்று எண்ணி வாசகர்கள் நகைக்க வேண்டாம். இதில் கண்ட பல விஷயங்களைப் பிறரும் செய்கிறார்கள். அஹிம்ஸையையோ சுதந்திரத்தையோ அவர்கள் தம் சேவையில் சம்பந்தப்படுத்துவதில்லை. அவற்றின் மதிப்பும் ஓரளவுக்குத்தான். ஒருவர் கலெக்டராயிருக்கும்போது அவரைப் பிறர் அதிகம் கவனிப்பதில்லை. பின்னால் அவரே கவர்னராகிப் பலபேர்களுடைய விதியைத் தீர்மானிக்கும் பேனா-வல்லபம் பெற்றவுடன் அவருடைய மதிப்பும் உயர்ந்து விடுகிறது. அதேபோலத்தான் ஒரு ஏழைவிதவை சர்க்காவைச் சுற்றினால் அவளுக்கு ஓரிரு காசுகள்தான் கிடைக்கும். ஆனால் ஜவாஹர்லால் சர்க்காவைச் சுழற்றினால், அது இந்திய சுதந்திரத்துக்குரிய ஆயுதமாக மாறிவிடுகிறது. இருக்கின்ற இடந்தான் சர்க்காவுக்கு மதிப்பு தேடிக் கொடுக்கிறது. அதுபோலவே நிர்மாணத் திட்ட வேலை சுதந்திரப் போராட்டத்தின் அம்சங்களாகக் கருதப்படும் போதுதான் அதன் கௌரவமும் சக்தியும் அதிகப்படுகின்றன.

இதுதான் என் கருத்து. இது ஒரு பித்தனுடைய பிதற்றல் என்று எண்ணக்கூடும். இதில் காங்கிரஸ் காரர்களுக்குக் கவனமில்லையென்றால் என்னை அவர்கள் விலக்கி விடட்டும். அவர்கள் நிர்மாண வேலைகளைச் செய்யாமல் என்னைச் சட்டமறுப்பு இயக்கம் மட்டும் நடத்தச் சொன்னால், அது திமிர்வாதம் பிடித்தவனைச் சாதம் பிசையச் சொன்னதாகத் தானிருக்கும்.

Indian Express Branch Press, Madras.

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

		ரூ.	அ.
1.	மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] ...	0	12
2.	ரவீந்திரநாத டாகுர் ...	0	8
3.	கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை)	0	8
4.	போலந்து—பின்லந்து (,,)	0	12
5.	சிறு கதை மஞ்சரி ...	1	0
6.	ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் ...	2	0
7.	தில்லைக் கோவிந்தன் ...	1	0
8.	அன்னை கஸ்தூரிபா ...	0	12
9.	முன்னிலா ...	0	12
10.	தனவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) ...	0	12
11.	மௌலானா ஆஸாத் ...	1	0
12.	கதை வனம்	1	0
13.	நவ ரஸங்கள் ...	0	12
14.	வீர ரஷ்யா (பாகம் I) ...	0	12
15.	காந்தியத் திட்டம் ...	1	8
16.	தற்காலப் போர்க் கருவிகள் ...	1	0
17.	கதா நாடக மஞ்சரி	0	8
18.	வீர ரஷ்யா (பாகம் II) ..	0	8
19.	கபீர்தாஸர் ...	0	8
20.	ஐக்கிய அமெரிக்கா ...	0	8
21.	தஞ்சை நாயக்கர் ...	0	8
22.	ஜீவ கலை ...	0	8
23.	அமிர்த சந்திரன் ...	1	0
24.	சிறை ...	0	8
25.	உத்தம வாழ்க்கை ...	0	8
26.	ஜனநாயகப் பிரச்னைகள் ...	0	8
27.	என் தந்தையார் ...	0	8
28.	புரட்சி முரசு ...	0	8
29.	இன்றைய தமிழ் வசன நடை ... (பிரதிகள் கைவசமில்லை)	1	0
30.	கோயிற் பூனைகள் ...	0	8
31.	ஹாஸ்யக் காட்சிகள் ...	0	8
32.	கன்னியர் வீரம் ...	0	8
33.	பெண்களுக்கு ...	0	6

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)